**தலையங்கம்:**

## ஜனவரி 18

ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 18ம் நாள் வரும். ஆனால் 1969ம் ஆண்டு ஜனவரி 18ம் நாள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாளாக ஆகிவிட்டது. காரணம், எதிர்பாராத வேளையில் 1936ம் ஆண்டு அதிசயம் ஒன்று நிகழ்ந்தது. அது எல்லாம் வல்ல இறைவன் அசரீரியான சிவபரமாத்மா புத்துலக படைப்பிற்காக ஒரு மனிதருடைய சரீரத்தை ஆட்கொண்டு ஆதார மாக எடுத்துக் கொண்டார். அவருக்கு பிரம்மா என பெயரிட்டார். இவர் மூலமாக படைத்தல் காரியங்கள் ஆரம்பமாகின. இதனாலேயே படைப்பிற்கு அதிபதி பிரம்மா என்ற நம்பிக்கை வந்திருக்கக்கூடும். இறைவன் பிரம்மாவை ஆட்கொண்ட அந்த நாள் முதல் தன்னுடைய தேகம், தேக சம்மந்தங்கள் மற்றும் தன்னுடையது என்று இதுகாறும் சொந்தம் கொண்டாடிய சொத்து, சுகம், அந்தஸ்து அத்தனையையும் சம்பூரணமாகவே இறை பணிக்கு அர்ப்பணித்துவிட்டார். இவருடைய இந்த எல்லையற்ற தியாகம், நிரந்தரயோகம், உலகளாவிய ஆன்மீகத் தொண்டு பூலோக வரலாற்றில் ஒரு மகத்தான சகாப்தம் மலர் வதற்கு முன்னோடியாக, ஆதாரமாக, அஸ்திவாரமாக அமைந்துவிட்டது. 1936ம் ஆண்டு முதல் 1969ம் ஆண்டு வரையிலான இந்த 33 ஆண்டு காலம் பொன்னெழுத்துக் களால் பொறிக்க வேண்டிய காலமாகும்.

ஏனெனில் பிரம்மா என அழைக்கப்பட்ட இந்த மனிதர் எல்லா மனிதர்களைப் போலவே பிறந்தார், வளர்ந்தார், காரியங்களும் செய்தார். ஆனால் தான் பெற்ற உடலைப் பிரிய வேண்டிய அந்த தருணம் வந்தபோதோ, அவர் தேவாதி தேவர்களுக்கெல்லாம், ஆதி தேவனாக, சொர்க்க சாம்ராஜ்யத்தின் முதலாம் அரியணைக்கு உரிமை பெற்றவராகியிருந்தார்.

**சங்கமயுகம்**

**பொருளடக்கம்**

**மலர்: 25 இதழ்: 5**

**டிசம்பர், 2011 - ஜனவரி, 2012**

| | | |
|---|---|---|
| 1. | தலையங்கம் | 01 |
| 2. | பகவான் வாக்கு | 03 |
| 3. | கடவுளின் தூதுவர்கள் | 04 |
| 4. | அகிலத்தின் தந்தை (பாட்டு) | 06 |
| 5. | உள்ளது உள்ளபடி | 07 |
| 6. | ஆன்மீக டாக்டர் | 11 |
| 7. | பிரம்மா குமாரிகள் யார் | 21 |
| 8. | குடும்பம் பண்புகள் | 25 |
| 9. | அறிவிப்பு கடிதம்.... | 27 |
| 10. | மனமாசும் இயற்சை மாசும் | 29 |
| 11. | ஜோதிர்லிங்க தரிசன சேவை... | 31 |

இந்த இதழில் வெளியாகும் ஆன்மீகக் கருத்துக்கள் கலியுகத்தின் இறுதியான இன்றைய புருஷோத்தம சங்கமயுகத்தில் அனைவருக்கும் ஆன்மீகத் தந்தையாக விளங்குகின்ற பரமபிதா பரமாத்மா, பிரஜாபிதா பிரம்மா மூலமாக இப்பூவுலகில் மீண்டும் தர்மத்தை ஸ்தாபனம் செய்வதற்காக அருளிச் செய்த மகாவாக்கியத்திலி ருந்து தொகுத்து வழங்கப்பட்டவையாகும்.

ஆசிரியர்

**"தூய்மையே சங்கமயுகத்தின் ஆஸ்தி"**



இது வரையிலும் இந்த உடல் மூலமாக ஆற்ற வேண்டியிருந்த தொண்டு இன்னும் அப்போது பாக்கியிருந்தது. ஆனால் இதற்கு இப்போ திருக்கிற இந்த பழைய உடல் பயன்படாது. ஆகவே இதற்கான வேறு வகை உடலைத் தரிக்க வேண்டிய அவசியம் உண்டாயிற்று. ஆகவே உலக நாடகத்தில் நிச்சயிக்கப்பட்டபடி, உரிய தருணம் வந்தபோது ஊனுடலைத் துறந்தார். சூட்சும ஒளி உடலைத் தரித்துக் கொண்டார். தொண்டு முன்னை விட பல்லாயிரம் மடங்கு விரிந்து பரந்தது. ஆதலால் பிரிந்தாலும், பிரியாமலே இருக்கின்றார். துன்பம் நிறைந்த இன்றைய உலகம் பேரின்பம் நிறைந்த மலர்ச் சோலையாக மலரும் வரையிலும் இந்த ஆதாரம் இறைவனுக்குத் தேவை. இந்த அற்புத மான அரிய உண்மையை அறிந்திருக்கும் பாக்கியசாலிகள் தான் எத்தனை பேர்? இவ்வண்ணம் உலக வரலாற்றில் படைப்பில் முதல் தெய்வீக புருஷராகவும், மிக முக்கிய ஹீரோ பாாட்தாரியுமான பிரம்மா, அவ்யக்த பரிஷ்தா நிலை ஆரோகணித்த ஆண்டான 1969 முதல் 2012ம் ஆண்டு ஜனவரி வரை 42 ஆண்டுகள் நிறைவடைந்து 43ம் ஆண்டின் நிமித்தம் உலக முழுவதிலுமுள்ள பிரஜாபிதா பிரம்மா குமாரிகள் ஈஸ்வரிய விஷ்வ வித்யாலயத்தைச் சார்ந்த லக்ஷோபலக்ஷ பிரம்மா குமாரிகள், பிரம்மா குமாரர்கள் தாங்கள் அன்போடு பாபா என அழைக்கின்ற பிரம்மா பாபா சமானமாக சம்பூரணமாக ஆவதற்கான ஆண்டாகக் கருதி, அவரது திவய அருள் மொழிகளையும், நடைமுறை வாழ்க்கையையும் தங்கள் வாழ்க்கையில் கடைப்பிடிக்கும் தீவிர முயற்சியில் ஈடுபாடு கொண்டுள்ளனர்.

ஆதலால் 2012ம் ஆண்டு ஜனவரி 18ம் நாள் அவ்யக்த பிரம்மாவின் திவ்ய நினைவு நாளாக அனுசரிக்கப்படுகிறது. இந்த நினைவு நாள் நம் ஒவ்வொருவருக்கும் மிக அவசியமான ஆன்மீக பரிபாலனையையும், பிரேரணை களையும் வரதானங்களையும் வழங்கி சத்யுக பொற்கால சகாப்தம் மலர அடிகோலும் என்பது சர்வ நிச்சயம்.

## புத்தாண்டு 2012 மற்றும் பொங்கல் நல் வாழ்த்துக்கள்

### 2012ம் புத்தாண்டினை வருக! வருக!
### என மகிழ்வுடன் வரவேற்போமாக!



புண்ணிய பாரதப் பொன்னாட்டின் பொற்கால வருகையை எதிர்நோக்கி புனிதப் பயணம் மேற்கொண்டிருக்கும் அனைத்து சகோதர சகோதரிகளுக்கும் சங்கமயுகம் இதழ் தொடர்ந்து வெளிவர நல் ஆதரவும், ஆசிகளும் வழங்கிக் கொண்டிருக்கும் வாசகர்கள் அனைவருக்கும் புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்கள்

- ஆசிரியர்.




## மனிதனிலிருந்து தேவதையாவதற்கான சத்தியமான சந்திப்பு சங்கமயுகத்தில் தான் நடக்கிறது, வேறுயுகத்தில் இல்லை.

இனிமையான குழந்தைகளே! சுகதாமம் அல்லது சத்யுகம் எனும் புதுயுகம் இப்போது வருகின்றது. ஆதலால் விழித்தெழுங்கள். ஸ்ரீலக்ஷ்மி-ஸ்ரீநாராயணர் அரசாளும் இராஜ்யம் வந்து கொண்டிருக்கிறது. சத்தியமானவர் ஒரே ஒருவர் தான். அவர் பதீதபாவன் என அழைக்கப்படுகின்றார். அவர் தான் பதீதமாகிவிட்ட மனிதர், அனைவரையும் புனிதமாக்குகின்றார். நீங்கள் வெகுகாலமாக பக்தி செய்து கொண்டிருக்கிறீர்கள். பக்திக்கான பலனை பகவான் அளிக்கின்றார் என்று புரிந்து கொண்டிருக்கிறீர்கள். பக்தி எப்போது முடிகிறதோ, அதன் பின்னரே பலனளிப்பதற்காக பகவான் வருவாரல்லவா? எல்லா பக்தர்களுக்கும் பகவான் ஒருவர் தான். பக்தர்கள் அவர் ஒருவரைத்தான் நினைவு செய்கிறார்கள். பக்தர்கள் என்றால் ஆண், பெண் இருபாலாரும் அடங்குவர். பக்தர்கள் அநேகராக இருக்கின்றார்கள். ஆனால் பகவான் ஒருவர் தான். அவர் பரமபிதா என அழைக்கப் படுகின்றார். பரமபிதா பரந்தாமத்தில் இருப்பவர். அவர் எல்லா ஆத்மாக்களுக்கும் பிதாவானவர். எல்லோருடைய துன்பங்களையும் நீக்கி, நிவாரணமும் அளிப்பவர் அவர் ஒருவரே. எங்களை துன்பத்திலிருந்து காப்பாற்றுங்கள், இரக்கம் காட்டுங்கள் என்று எல்லோரும் அவரிடமே வேண்டிக் கொள்கிறார்கள்.

பரமபிதா பரமாத்மா எல்லோர் மீதும் இரக்கமுள்ளவராக இருக்கின்றார். அவர் பாரதத்தை சத்தியமான கண்டமாக மாற்றுகின்றார். பாரதம் வைரத்திற்குச் சமமாக இருந்தது. இப்போது அவ்வா றில்லை. உங்களுடைய வாழ்க்கையும் மாறும், தெய்வீக குணங்களை நடைமுறையில் இப்போது நீங்கள் கொண்டு வந்து கொண்டிருக்கிறீர்கள். இதனால் நீங்கள் மனித நிலையிலிருந்து தேவ நிலைக்கு மாறுவீர்கள். இவ்வாறு மனிதனை தேவனாக மாற்றுவது ஞானசாகரமாக இருக்கக்கூடிய பரமபிதா பரமாத்மாவின் கடமை. அவர் தான் சத்தியம் என அழைக்கப்படுகின்றார். ஏனெனில் அவர் ஒருவர் தான் சத்தியமான வழி காட்டுகின்றார். அவர் மனிதன் தேவனாக ஆவதற்கான படிப்பினைக் கற்பித்து தேவதையாக்குகின்றார். இவ்வாறு மனிதனை தேவதையாக்குகிறேன் என்று சொல்லக்கூடியவர் வேறுயாருமிலர். யார், இப்போது அவர் வழிப்படி நடக்கின்றாரோ முயற்சி செய்கின்றாரோ, அவர் சத்யுக சூரிய வம்சத்தில் வருவார். பகவானுடன் இதற்காக சத்தியமான சந்திப்பு இந்த யுகத்தில் இப்போது நடக்கிறது.

# பிரம்மா குமாரிகள் கடவுளின் தூதுவர்கள்

கடவுள் பிரம்மா மூலமாக உலகைப் படைத்தார் என்றும், பிரம்மாவின் வாய் மூலமாகப் பிறந்த குழந்தைகள் பிராமணர்கள், பிரம்மா முகவம்சாவழியினர் என்று பகவத் கீதை கூறுகின்றது. பகவத் கீதை மூலமாக இன்னும் நாம் அறிவது என்னவென்றால், எப்பொதெல்லாம் அதர்மம் அதன் உச்சத்தை எட்டிவிடுகிறதோ, அப்போது மனிதர்களை அவர்களுடைய துன்பத்திலிருந்தும், கர்ம பந்தனங்களிலிருந்தும் விடுவிப்பதற்காக பாரத தேசத்தில் அவதரிக்கிறேன் என்று உறுதி மொழியையும் அளித்திருக்கின்றார் என்பதாகும். **(யதா யதாஹி தர்மஸ்ய கிளாநிர் பவதி பாரத்).**

இதெல்லாம், இன்றைய நிலையைக் குறிப்பதாக இருக்கின்றது. இப்போதைய இந்த நிலை பற்றி உன்னிப்பாக கவனிப்போமே யானால், இந்த நேரம் எதையோ முடிவாகத் தீர்மானிக்க இருப்பதைப்போன்றும், இதன் மூலமாக ஏதோ ஒரு பெரிய மாற்றம் ஏற்படக்கூடுமென்றும், அது நிச்சயமாக அனைவருக்கும் நன்மை பயக்கக்கூடியதாகவே இருக்கும் என்பதை ஏறக்குறைய யூகிக்க முடியும். மேலும் பண்புகளை முற்றிலுமாக இழந்துவிட்ட இன்றைய உலகம், நற்பண்புகள் நிறைந்த நல்லுலகாக மாறக்கூடும் என்ற எதிர்பாப்பும், மறுமலர்ச்சி உண்டாகும் என்ற நம்பிக்கையையும் ஊட்டுவதாக இருப்பதும் தெரிகிறது.

எல்லாம் வல்ல பரமாத்மா தான், உலகிலுள்ள ஆத்மாக்கள் அனைவருக்கும் பிரம்மா வாய் மூலமாக ஞானாமிருதம் அளித்து ஆத்மாக்களை புனிதமாக்கும் இம்மாபெரும் கைங்கரியத்தைச் செய்து கொண்டிருக்கின்றார்.

இதில் நல்ல செய்தி என்னவென்றால் இதற்காக வெகுகாலமாக காத்திருக்கும் ஆத்மாக்களுக்கு ஒருமுடிவு என்பது கிடைத் திருக்கிறது என்பது தான். பரமாத்மாவாகிய இறைவன், இன்றைய புனிதகாலமாகிய சங்கம யுகத்தில் இரும்பாக மாறிவிட்ட கலியுகத்தை பொன்னான சத்யுகமாக மாற்றுகின்ற மாபெரும் திட்டத்தை பிரஜாபிதா பிரம்மா மற்றும் அவருடைய குழந்தைகள் மூலமாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்.

ஆதலால் பிரம்மாவின் குழந்தைகளாகிய பிரம்மா குமாரிகளும், குமாரர்களும் உலகத்திற்குச் சொல்லுகின்ற செய்தி எல்லாம் வல்ல இறைவன் பரமாத்மாவிடமிருந்த வெளிவந்த செய்தியேகும். உலக முழுவதிலு முள்ள இராஜயோக நிலையங்கள், அவரது குழந்தைகளாகிய அனைவருக்கும் திறக்கப் பட்ட பாடசாலைகளேயாகும். அங்கு கற்பிக்கப் படும் ஞானமும் இறைவனுக்கே சொந்த மானதேயொழிய பிரம்மா குமாரிகளினுடைய சொந்த கருத்தல்ல என்ற உண்மையை அறிய வேண்டும். ஆதலால் பிரம்மா குமாரிகளும், பிரம்மா குமாரர்களும் இறைவனுடைய தூதுவர் களாக, அவர் அளிக்கின்ற செய்தியினை உலக மக்களிடம் எடுத்துச் சென்று சேர்ப்பிக்கின்ற நிமித்த செய்தியாளர்களே யாவர். இதற்காக எல்லோரும் தயாராவதற்காக உதவியும் செய்கின்றார்கள்.

யாரொருவர் இந்த ஞானத்தைப் புரிந்து கொண்டு நடைமுறையில் கடைப்பிடிக்கின்றார் களோ, அவர்கள் தானாகவே மற்றவர்களுக்கும் தூண்டுதல் அளிக்கிறார்கள். இதன் மூலம் தன்னை எல்லா கர்ம பந்தனங்களிலிருந்தும் விடுவித்துக் கொள்வதோடு, மற்றவர்களும் விடுதலை பெற வழிகாட்டிகளாவார்கள். இந்த வழிகாட்டுதல் கருணைக்கடலாக விளங்கும் பரமாத்ம தந்தை எப்போதும் தன் குழந்தை களின் நன்மைக்காக காட்டுகின்ற வழியாக இருக்கின்றது.

சுயமாற்றத்தின் மூலம் உலக மாற்றம் என்பது கடவுளின் திட்டம். இது அமைதி வழி

புரட்சியுமாகும். இதில் யாரொருவர் கடவுளின் துணைவனாக ஆக விரும்புகின்றாரோ, அவர் இந்த ஆன்மீகப் பணிக்காக உள்ளார்ந்த சுயமாற்றம் செய்து கொண்டவராக இருக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது.

இம்மாதிரியாக புனிதமாவது என்பது, தொடர்ந்து இராஜயோக தியானம் செய்யும் பயிற்சியில் சம்மந்த முடையதாக இருக்கின்றது. இதன் மூலம் அதிமேலான தந்தை பரமாத்மா வுடன் வைத்துக் கொள்கின்ற அன்புத் தொடர்பு, அவருக்குத் தேவையான சக்திகளை அவரிட மிருந்து பெற்றுக் கொள்வதற்கு உதவுகின்றது. இந்த சக்திகள் தான் ஒருவர் ஏற்றுக் கொண்டி ருக்கின்ற பணியை தொடர்ந்து செய்வதற்கு உதவியாக இருக்கின்றது. இதன் காரணமாக அவரிடம் அவசியமான மாற்றங்கள் ஏற்பட்டு, அது அவரது சொல்லிலும், செயலிலும் பரிணமிக்கும்.

படிப்படியாக ஏறப்ட்டுவருகின்ற பரிணாம விருத்தியானது காமம், கோபம், லோபம், மோகம் அகங்காரம் என்ற அசுர சக்திகளை அழித்து இந்த இடத்தில் ஞானம், தூய்மை, அன்பு, ஆனந்தம், சக்தி மற்றும் மகிழ்ச்சி யானது அமர்ந்து கொள்கிறது.

சாஸ்திரங்களில் கூறப்பட்டிருப்பதுபோல, தெய்வ சம்பிரதாயம் மற்றும் அசுர சம்பிரதாயம் என்பது உண்மையில் வெவ்வேறு உலகத்தைச் சார்ந்தவர்களுடையதல்ல, மாறாக மனிதன் ஒரு காலத்தில் தெய்வீக சம்பிரதாயமுடைய வனாகவும், இன்னொரு காலத்தில் அசுர சம்பிரதாயமுடையவனாகவும் இருக்கிறான் என்பதைக் குறிப்பதாகும்.

இதைப்பற்றிய உண்மையினை தீர்மான மாகக் கூறுவதானால், இப்போது எல்லாம் வல்ல இறைவன் ஜீவாத்மாக்களுக்கு ஆன்மீக ஞானம் அளித்து, ஆன்மீக சக்திகளும் அளித்து, அசுர சம்பிரதாயங்களை உதறித்தள்ளிவிட்டு, தெய்வீக சம்பிரதாயமுடையவர்களாக ஆக்குகின்றார்.

இந்த வழியினைத் தேர்ந்தெடுக்க விரும்புபவர்கள், இந்த உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும்போதே பழைய உலக சுபாவங் களிலிருந்து தன்னை விடுவித்து கொண்டே யிருக்க வேண்டியது அவசியம்.

இவ்வாறு பழைய உலகப் பற்றை விலக்கிவிட்டால், பழைய உலக சுபாவங்களால் கவர்ச்சிக்கப்பட மாட்டார்கள். ஆகவே தான் ஆன்மீகப் பயணத்தை மேற்கொண்டிருக்கின்ற ஒரு மனிதனை, அல்லது இராஜயோகியை ஒரு தாமரை மலருக்கு ஒப்பாக மலரின் வேர்ப் பாகம் தண்ணீரின் கீழ் மட்டத்தில் சேற்றில் இருந்தாலும், இதன்னால் பாதிப்பிற்குள்ளாத நிலையில், தாமரை தண்ணீரின் மேல் மட்டத்தில், ஒட்டாமல் மிதந்து கொண்டிருக் கிறதோ அதுபோல குடும்பத்தில் இருந்தாலும் கர்மங்கள் செய்து கொண்டிருந்தாலும் பற்றற்ற நிலையில் இருக்க வேண்டும் என்பதைக் குறிக்கின்றது.

இவ்விதமாக உலகின் ஐந்து தத்துவங் களிலும் மாற்றம் உண்டாகி பழையன கழியும், புதியன புகுந்து விடும். அதாவது மனித ஆத்மாவும், இன்றைய தமோபிரதான நிலையிலிருந்து சதோபிரதான நிலையுடைய தாக மாறும். இத்தகைய மாற்றத்திற்கான அஸ்திவாரம் இறைவன் அவதாரத்தின் மூலம் அமைக்கப்பட்டது. இப்போது 75 ஆண்டு களாகின்றது. இன்னும் மீதமிருப்பது மிகக் குறைவான காலமேயாகும். உலக முழுமை யிலுமுள்ள அனைவரின் நன்மையின் பொருட்டு நடந்து கொண்டிருக்கின்ற இம்மா பெரும் அமைதிப்புரட்சியில் பங்கு பெற்று இதில் தன்னையும் இணைத்துக் கொள்வதன் மூலம் பிரமாத்மாவிடமிருந்து தன்னுடைய பிறப்புரிமையைப் பெற முடியும். இதற்காக தங்களுக்கு வழிகாட்ட அருகாமையிலுள்ள இராஜயோக நிலையங்களை நாடுங்கள்.

# அகிலத்தின் தந்தையே

**பி.கு. சண்முக நாதன், கோட்டாஞ்சேனை, ஸ்ரீலங்கா**

கற்றிட வைத்திட்டார் கல்வியினை ஆனாலும்,
பெற்றவர் என்னைப் பெயர்விளங்க வைக்கவில்லை
தூற்றவும் செய்தார், துயர்படவும் வைத்திட்டார்
பெற்றோரின்றி பிள்ளை பிரகாசிக்க முடியுமோ?

அகிலத்தின் தந்தையே அனைவருக்கும் பரமபிதாவே!
அனாதை என்றெண்ணிய என்னை அவசரமாய் தேர்ந்தெடுத்தாய்
ஆருக்கு ஈடுஇணை இங்கே உந்தன் அருளுக்கு
அன்பினிலே மூழ்கித் திளைத்தேனே அப்பா!

ஆரத்தழுவி எனை அரவணைத்தாய், உச்சிமோர்ந்தாய்
பெயரைத் தந்து என்னைப் பிராமணனாய் ஆக்கிவிட்டாய்
ஊரார் உணர்ந்திலரே உண்மையினை அறியாரோ?
வேரானேன் அப்பா நீ விருக்ஷத்தின் விதை ஆனாயே!

பேருக்குப் பிள்ளையென பேரைப் போலில்லாமல்
ஊருக்குச் சொல்லி வைப்பேன் உந்தன் அறிமுகத்தை
பாருக்கு நீ வந்து படிப்பிக்கும் விந்தையை நான்
ஆருக்கும் சொல்லி வைப்பேன் அன்போடு சேரவைப்பேன்

தத்தெடுத்த குழந்தை நான் சவலையாய் போகாமல்
தந்திடுவாய் உந்தன் சக்தியை, திவ்ய குணங்களை
பெத்தெடுத்த பிள்ளையாய் பேணி நீ காத்திடுவாய்
போற்றுவேன் உந்தன் மகிமைதனை போற்றிப்பாடிடுவேன்

எத்தனை நாள் பிரிந்திருந்தேனோ, இன்று கண்டு கொண்டேன்
எப்போது என்னை நம் வீட்டுக்கு அழைத்துச் செல்வீர்?
தத்துவமும் தூய்மையற்றதால் தவிக்கிறேன் தந்தையே
தவறாது தூய்மையாய் வருவேன் நான் சத்யமிது

---

**நீங்கள் ஒருவரல்ல மூவர் எப்படி?**
**முதலாவது உங்களைப் பற்றி நீங்கள் நினைப்பது போல ஒருவர்!**
**இரண்டாவது உங்களை பிறர் கணிப்பதைப்போல ஒருவர்!**
**மூன்றாவது உண்மையில் நீங்கள் யாரோ அந்த ஒருவர்!**

# உள்ளது உள்ளபடி



பாரதத்தில் பரம்பரையாக பாரிமாறிக் கொள்கின்ற கதைகள் பல உண்டு. உண்மையா? அல்லது கற்பனையா? என்பது முக்கியமல்ல. அதில் பொதிந்துள்ள கருத்தை புரிந்து கொள்வது தான் முக்கியம். இவற்றில் தேவதைகளின் பிறப்பு பற்றிய வர்ணனைகள் விநோதமானவை. பொதுவாக வீட்டில் குழந்தை பிறந்திருக்கிறது என்றால், அக்கம், பக்கம் உற்றார் உறவினர் எல்லாம் மகிழ்ச்சியோடு வந்து செல்வதுண்டு. இதை புத்திர பாக்கியம் என்றும் கூறுகிறார்கள். மேலும் குடும்பத்தார், இந்தக் குழந்தைக்கு, இந்த வீட்டில் பிறக்க வேண்டிய கர்மக் கணக்கு இருந்திருக்கிறது என்றும், அந்தக் கணக்கை முடிப்பதற்காகவே இங்கு வந்து பிறந்திருக்கிறது என்றும் பேசிக் கொள்வார்கள்.

பிறவி என்பதே துன்பம். கணக்கு இன்னும் தீரவில்லை என்று வருத்தப்படுபவர்களும் உண்டு. பிறந்து விட்டால், இன்னொருவருடன் சம்மந்தம் வைத்துக் கொள்ள வேண்டிய நிர்பந்தம் உண்டாகி விடுகிறது. கர்மக்கணக்கு தொடர்கிறது. இவ்வாறாக ஆத்மாவானது கர்மபந்தனத்தில் கட்டுண்டு விடுகிறது. இதன் காரணமாக ஹே, பிரபு ! எனக்கு ஜன்ம மரணத்திலிருந்து முக்தி கொடு என்று பிராத்தனை செய்வதும் உண்டு.

அடுத்து தேவதைகளின் பிறப்பு பற்றி, பொதுவாக என்ன தெரிந்து வைத்திருக்கிறோம். ஜன்மாஷ்டமி, ஸ்ரீராம நவமி, பண்டிகைகள் மிக உற்சாகமாகக் கொண்டாடி வருகிறோம். இவர்களுடைய பிறப்பு சாதாரண மனிதப் பிறவியாகக் கருதப்படுவதில்லை. ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தியை, ஜன்மாஷ்டமி என்ற பெயரில் கொண்டாடுகிறோம். ஸ்ரீ கிருஷ்ணருடைய சித்திரம், பால்யப் பருவத்திலேயே தலையில் மகுடம் அணிந்த உருவாகக் காட்டப்பட்டுள்ளது. இவருடைய பிறவி கர்ம பந்தனத்தால் உண்டானது என்று கூறப்படுவதில்லை. மாறாக ஜீவன் முக்த் ஜென்மம் என்று கருதப்படுகிறது. ஸ்ரீ கிருஷ்ணருடைய ஜன்மம் பிரசித்தி வாய்ந்தது. பூஜைக்குரிய பிறவியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட ஜன்மம், மனித குலத்திற்காக, தேசத்திற்காக, உலகத்திற்காக என்று கருதப்படுகிறது. மேலும் இவருடைய வாழ்க்கை வரலாற்றை அறிவதன் மூலம் பெரிதும் பயன் அடைகிறோம். ஏனெனில், இதன் மூலம் மனிதர்களுக்கு தாங்களும் மகான் ஆக வேண்டும் என்ற பிரேரணை கிடைக்கிறது. ஸ்ரீராம் மற்றும் ஸ்ரீ கிருஷ்ணர் என்ற பெயர்கள் பற்றிய உள்ளார்ந்த இரகசியம் என்ன?

ராம் என்ற பெயரில் அழைக்கப்படுபவர் இருவராக இருக்கின்றனர். ஒருவர் திரேதா யுகத்தில் 14 கலை சம்பூரணமான தசரத புத்திரன் ஸ்ரீ ராம் ஆக இருப்பவர். இன்னொருவர் சுயம் நிராகார் பரமாத்மாவினுடைய பெயர் ராம் என்பதாகும். தசரத புத்திரனாகிய ஸ்ரீ ராம் என்பது பெயர்ச் சொல்லாகவும், பரமாத்மாவைக் குறிக்கும் ராம் என்ற சொல்லானது, மனிதனுக்கு இடப்படும் பெயர்ச் சொல்லாக இல்லாமல் குணத்தையும், செயலையும் குறிக்கும் காரணப் பெயராக இருக்கிறது. ராம் என்பதன் பொருள் ரமணீகரமானது என்பதாகும். கீதையில் சொற்கள் குணாதிசயங்களைக் குறிப்பதாக இருக்கிறது. ஆகவே தான் கிருஷ்ணா என்ற பெயர் பரமாத்மாவுக்குரியதாகவே இருக்கும் என்று உறுதி செய்ய முடிகிறது. பக்தர்கள் கூட பகவானை பிரார்த்திக்கும் போது ஹரி, தயாளு, தீனபந்து என்று குணாதிசயத்தைக்குறிக்கும்

காரணப்பெயர்களாகவே இருப்பதை நாம் அறிவோம்.

மேலும் நிராகார் ராம் ராமேஷ்வர் என்றும் அழைக்கப்படுகிறார். தென்னிந்தியாவிலுள்ள இராமேஷ்வரத்தில், சிவலிங்க வடிவில் ஞாபகார்த்தம் இருக்கிறதல்லவா? இதேபோல கிருஷ்ண பிருந்தாவனத்தில் கோபேஷ்வர் என்ற பெயரில் சிவலிங்க வடிவில் ஞாபகார்த்தம் உள்ளது. இதன் மூலம் கீதையில் உச்சரிக்கப்பட்டுள்ள கிருஷ்ண என்ற பெயரும் பரமாத்மா சிவனை ஆகர்ஷண மூர்த்தியாகக் குறிக்கும் குணாதிசயப் பெயராகும்.

## சிவனுடைய ஜன்மம் மற்றும் ஸ்ரீ கிருஷ்ணருடைய ஜன்மத்திற்குமுள்ள வேறுபாடு:

14 கலை சம்பூரணமான ஸ்ரீ ராமனுடைய ஜன்மம் திரேதாயுகத்தின் ஆரம்பமாகும். 16 கலை சம்பூரணமான ஸ்ரீ கிருஷ்ணருடைய ஜென்மம் சத்யுகமாகும். திரேதாயுக காலத்தில் ஜனக மகாராஜனுடைய புத்திரியான ஜானகியின் பெயர், சுயம் வரத்திற்குப் பின் ஸ்ரீசீதாதேவி ஆயிற்று. இதுபோல, ஸ்ரீ கிருஷ்ணருடைய பெயர், சுயம் வரத்திற்குப் பின்னர் ஸ்ரீ நாராயணன் ஆயிற்று. ஸ்ரீ ராம் மற்றும் ஸ்ரீ கிருஷ்ணருக்கு பெற்றோர்கள் உண்டு. இவர்களுடைய ஜன்மம் புனிதமானது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இவர்களுடைய ஜன்மம் மற்ற ஜீவாத்மாக்களுடைய ஜன்மத்தைப்போல பெற்றோர்களுடனான கர்மக்கணக்கை முடிப்பதற்காக எடுக்கின்ற ஜன்மம் அல்ல. இவர்கள் ஜீவன் முக்தர்கள், புனிதமானவர்கள் மற்றும் பூஜைக்குரிய தேவதைகள். சத்யுகம், திரேதாயுகம், அடுத்து மூன்றாவதாக வரும் யுகம் துவாபரயுகம். இந்த யுகத்தில் பிறவி எடுப்பவர்கள் மனிதர்கள். தேவதைகள் அல்லர். மனித சிருஷ்டியில் தேவதா நிலை என்பது முதல் இரண்டு யுகங்களோடு முடிந்து விட்டன. ஆதலால் பூஜைக்குரிய ஸ்ரீ கிருஷ்ணர் துவாபரயுகத்தில் ஜென்மம் எடுத்ததாக சொல்லப்பட்டிருப்பது பொருந்தாத ஒன்றாக இருக்கிறது. உண்மையில் ஸ்ரீ கிருஷ்ணருடைய ஜன்மம் சத்யுக ஆரம்பத்தில் சதோகுணி சிருஷ்டியாயிருந்த போது நடந்ததாகும். மதுராபுரியில் கம்சனுடைய ஜெயிலில், இரவு நேரத்தில் ஸ்ரீ கிருஷ்ணர் ஜன்மம் எடுத்தார் என்ற கூற்று சுவையுள்ள கற்பனையாகவே இருக்க முடியும். ஏனெனில் ஸ்ரீ கிருஷ்ணன் ஜீவன் முக்தர். அவர் ஜெயிலில் பிறந்தார், கஷ்டப்பட்டார் என்பதில் ஏதோ ஒரு கருத்து உள்ளடங்கியிருக்கிறது என்று எண்ண வேண்டியதாக இருக்கின்றது.

கிருஷ்ண என்பதன் பொருள் ஆகர்ஷிப்பவர், ஆகர்ஷண மூர்த்தி என்பதாகும். புள்ளி வடிவாக, நட்சத்திரம் போன்று பிரகாசிக்கும் நிராகார் பகவானைக் குறிக்கும் சொல் இது. பகவான் பிறவிக்கு அப்பாற்பட்டவர். பகவான் கல்யாணகாரி. அதாவது அனைவருக்கும் மங்களம் செய்விப்பவர். இந்தக் காரணத்தின் அடிப்படையில் பூஜைக்கான, பிரதிமை லிங்கமாகவும், காரணப் பெயராக சிவா என்பதும் பிரசித்தமாக இருப்பதைக் கவனிக்க வேண்டும். மேலும் ஸ்ரீ ராமேஷ்வர், கோபேஷ்வர் என்ற பெயரில் தெற்கிலும், வடக்கிலும் இதன் ஞாபகார்த்தங்களாக சிவஸ்தலங்கள் இருப்பதும் நாம் அறிந்த ஒன்று தான். மேலும் கலியுக கடைசி நேரம் இருளுக்கு ஒப்பாகக் கருதப் படுகிறது. ஏனென்றால், அந்த வேளை மனிதர்கள் அஞ்ஞான அந்த காரத்தில் அதாவது தான் ஒரு அழிவற்ற, தூய்மையான, சாந்த சொரூப மான ஆத்மா என்பதை மறந்த நிலையில் இருக்கின்றனர். இது அஞ்ஞான நித்திரையில் இருப்பதற்கு ஒப்பாகவும் கருதப்படுகிறது. இதன் காரணமாக விகர்மங்கள் செய்தும், கர்ம பந்தனத்தில் கட்டுண்டிருப்பவர்களாகவும் இருக்கின்றனர். இந்த நிலை ஜெயிலில் இருப்பது போன்ற நிலையாகும். இருண்ட

ஜெயிலாக இருக்கும் காலத்தில் பரமபிதா பரமாத்மாவாகிய ஜோதி பிந்து சிவா பரந்தாமத்திலிருந்து வந்து அவதரிக்கின்றார். இந்த அவதாரத்தில் முக்கியமாக கருத்தில் கொள்ள வேண்டிய விஷயம் உண்டு. சத்யுகத்தில் குழந்தைப் பருவத்தில் ஸ்ரீ கிருஷ்ணன் என்றும் பெயர் சூட்டப்பட்டவர் (தேவதா) ஜென்மம் எடுத்தெடுத்து, கலியுக கடைசியில் ஒரு சாதாரண மனிதராக இருக்கின்றார். அந்த உடலில் தான் பரமாத்மாவாகிய சிவன் பிரவேசம் செய்கின்றார். இந்த பரகாய பிரவேசம் தான் நிராகார் கிருஷ்ண அதாவது பரமபிதா பரமாத்மா சிவனுடைய திவ்ய, அலௌகீக, இயற்கைக்கு அப்பாற்பட்ட ஜன்மம் ஆகிறது. பரமபிதா சிவன் அந்த மனிதருக்கு பிரம்மா எனப்பெயர் சூட்டுகின்றார். பிரம்மா என்ற சொல் வடமொழிச் சொற்களான பிருஹி மற்றும் பூரு என்ற வினைச் சொல்லின் மூல ரூபம். மேலும் பிருஹி என்பதன் பொருள் படைப்பது, அதை விருத்தி செய்வது என்பதைக் குறிக்கும். ஏனென்றால் பரமாத்மா அந்த மனிதரின் வாய் மூலமாக கீதை ஞானம் அருள்கின்றார் அல்லது உபதேசம் செய்கின்றார். ஆதலால் இதன் அறிமுக வாக்காக, பிரம்மா என்று பெயர் சூட்டப்பட்டிருக்கின்றார். பிறகு அந்த மனிதர் அந்த ஞானத்தை மற்றவர்களுக்கு சென்றடையுமாறு பிரச்சாரம் செய்து பிரஜைகளை உருவாக்குகின்றார். மேலும் பரமாத்மாவின் இந்த காரியத்திற்கு, இந்த உடல் (பிரம்மா) ஆதாரமாகும். இவ்வாறு பயன் பட்டதன் காரணமாகவும், பிரம்மா அல்லது பிரஜா பிதா பிரம்மா என்ற பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் இவருடைய இன்னொரு பெயர் அர்ஜுன். ஏனெனில் அவர் தானும் கீதை ஞானத்தைப் பெற்றார். அர்ஜித் என்பதற்கு பெற்றவர் என்று பொருள். ஆதலால் அர்ஜுன். பிரம்மாவின் (அர்ஜுன்) சரீரமாகிய ரதத்தில் பிரவேசம் செய்ததன் காரணமாக நிராகார் கிருஷ்ண அர்ஜுனனுடைய சாரதியாக பிரசித்தமாகியுள்ளது. ஆனால் இன்றைய மனிதர்கள் இந்த ஆழமான இரகசியத்தைப் பற்றிய ஞானம் இல்லாதவர்களாக இருக்கின்றார்கள். ஆதலால் இவர்கள் கிருஷ்ண ஜன்மாஷ்டமியின் உண்மையான இரகசியத்தையும் அறியாமலிருக்கிறார்கள்.

## ஸ்ரீகிருஷ்ண ஜன்மாஷ்டமி பற்றிய உண்மை:

புரட்டாசி மாதத்தில், கிருஷ்ண பக்ஷத்தில், அஷ்டமி வருகிறதல்லவா, அந்த நாளில் ஸ்ரீ கிருஷ்ணர் பிறந்தார் என்று நினைக்கிறார்கள். ஆனால் ஸ்ரீமத் பகவத் கீதையின் மூலம் அறிவது என்னவென்றால், ஸ்ரீ கிருஷ்ணர் ஜென்மம் எடுத்ததும், அல்லது இதற்கு சற்று முன்பு முக்கியமான எட்டு தேவதைகளும் ஜன்மம் எடுத்தனர் என்பதாகும். ஆதலால் உண்மையில் ஜென்மாஷ்டமி ஸ்ரீ கிருஷ்ணருடைய ஜன்ம உற்சவம் மட்டுமல்லாது, எட்டு தேவதைகளினுடைய ஜன்மோற்சவமாகவும் இருக்கின்றது. ஸ்ரீ கிருஷ்ணர் போன்ற தேவதைக்கு, சகோதரன், சகோதரி போன்ற உறவினர்களும் தேவதைகளாகவே இருப்பார்கள் அல்லவா? தேவதைகளைப்பற்றிக் கூறும்போது, இந்த தேவதா ஜன்மம், இவர்கள் செய்த புண்ணிய கர்மத்தின் பாக்கியத்தை அனுபவம் செய்வதற்காகக் கிடைத்ததாகும். ஆகவே தேவதைகளுக்கும், ஸ்ரீ கிருஷ்ணருக்கும் இப்படிப்பட்ட ஜன்மம் கிடைத்திருக்கிறதென்றால், இவர்கள் தங்கள் பாக்கியத்தையும் கூடவே கொண்டு வந்திருக்கிறாகள் என்பது தெளிவாகிறது. இப்போது கூட வீட்டில் குழந்தை பிறந்திருக்கிறது என்றால், ஜனங்கள் என்ன சொல்கிறார்கள்? இந்தக் குழந்தை அதிருஷ்டக்காரக் குழந்தை என்கின்றனர். அதாவது அந்தக் குழந்தை தன்னோடு அதிருஷ்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது என்பதாகும். மக்களிடையே வழக்கில் இப்படிப் பேசப்படும்போது, ஸ்ரீ

கிருஷ்ணரும், எட்டு தேவதைகளும் கூட தாங்கள் ஜன்மம் எடுத்தபோது தங்களோடு தங்களுடைய தெய்வீக பாக்கியத்தை கொண்டு வந்திருக்க மாட்டார்களா? நிச்சயமாக கொண்டு வந்திருக்க மாட்டார்களா? நிச்சயமாக கொண்டு வந்திருப்பார்கள். இதன் மூலம் ஸ்ரீ கிருஷ்ணருடைய ஜன்மம் துவாபரயுகத்தில் அல்ல என்பதும், மாறாக சத்யுகத்தில் என்பதும் தெளிவாகிறது. ஏனெனில் தேவி-தேவதை களின் பாக்கியம் அனுபவிப்பதற்கு யோக்கிதை சத்யுக சிருஷ்டியில் தான் உள்ளது. அந்தக் காலம் தான் சதோபிரதான பதார்த்தங்களும், தர்மமும், சதோபிரதான மனிதர்களும் உள்ள காலம்.

மேலே விஸ்தாரமாகச் சொல்லப்பட்ட வற்றின் சாராம்சம் இது தான். ஸ்ரீகிருஷ்ணர் ஒரு சதோபிரதானமான தேவதையாக இருந்தார். அவர் சங்கமயுகத்தில் பிரஜாபிதா பிரம்மா என்னும் ரூபத்தில் பரமபிதா பரமாத்மா சிவனிடமிருந்து கீதை ஞானம் அருளப்பெற்று ஈஸ்வரிய ஜன்ம சித்தி அதிகாரமாகிய வைகுண்ட தேவி சுய இராஜ்யம் பெற்றார். மேலும் இப்போது மீண்டும் சங்கமயுகம் நடந்து கொண்டிருக்கிறது. நாமும் கூட பரமபிதா பரமாத்மாவிடமிருந்து உண்மையான கீதை ஞானம் மற்றும் ஈஸ்வரிய ஜன்ம சித்த அதிகாரம் அடையப்பெற்று சொர்க்க இராஜ்ய பாக்கியம் அடைவதற்கு யோக்கிய தாம்சம் உடையவராக வேண்டும்.

---

## தான தர்மம்

**உலகில் மனிதர்கள் எத்தனையோ விதமாகத் தொண்டு செய்கிறார்கள். ஆனால் எல்லாவற்றிலும் சிறந்த தொண்டு, தவறு செய்கின்ற மனிதனை அதனின்றும் விடுவித்து அவனுக்கு நல்வழிகாட்டுவது தான். ஒருவனுக்கு பசியாற உணவளிப்பதும், ஆடையளிப்பதும் எளிது. இதுவும் அவசியமான ஒன்று தான். ஆனால் ஒருவனது பாவச் செயலால் அவன் அடைய விருக்கும் தண்டனையிலிருந்து காப்பாற்றுவதற்காக அவனுக்குச் செய்யும் தொண்டு அவ்வளவு எளிதானதல்ல. ஒருவன் தாகத்தோடு வரும் பொழுது அவனுக்குத் தண்ணீர் கொடுத்தால் திருப்தியடைகின்றான். ஆனால் கடவுளை அறிய வேண்டுமென்ற ஒருவனது ஆத்ம தாகத்தைத் தீர்ப்பது அதைவிட திருப்தியளிக்கக்கூடிய தொண்டாகும். ஒருவனுக்குப் பணக் கஷ்டமிருக்கும்பொழுது, பணம் கொடுத்து உதவினால் அவன் மகிழ்ச்சி அடைகிறான். ஆனால் அவனுக்கு அழியாத ஞானத்தையும், யோகத்தால் பெறும் ஆனந்தத்தையும் அளிக்க முடிந்தால் அவன் பெரு மகிழ்ச்சியடைவான். ஆனால் இவ்வளவு பெரிய சௌபாக்கியத்தை எல்லோராலும் அளிக்க முடிவதில்லை.**

---

## இரக்கம்

**தான் இரையாகக் கொள்ளும் எத்தனையோ ஜீவராசிகள் தனது இரக்கத்திற்கு அறுகதை உள்ளவைகள் அல்ல என்று நினைக்கும் மனிதன், இறைவன் தனக்கு இரக்கம் காட்ட வேண்டுமென்று எதிர்பார்ப்பதில் என்ன நியாயம் இருக்க முடியும்!**

# ஆன்மீக டாக்டர், சுப்ரீம் டாக்டர்

பி.கு. பார்வதி, முகப்பேர், சென்னை



பரம்பொருள் பரமாத்மாவை பக்தியில் பல பெயர்களில் அவரின் திவ்யமான செயல்களால் காரணப்பெயராக அழைப்பதுண்டு. அவ்வாறு அழைப்பதில் ஒன்று தான் வைத்தியநாதன் என்பதும். அவர் தான் அனைத்து ஆத்மாக் களின் விகாரம் என்ற நோயை விலக்கி தூய்மைப்படுத்தி வீட்டிற்கு அழைத்துச் செல்பவர். சில சமயங்களில் அவரது காரியம் ஸ்தூலமாகவும் நடைபெற்று வரும். பக்தர் களின் தீவிர பக்திக்காக அவர் சில அற்புதங் களையும், ஆச்சரியமான காரியங்களையும் செய்து ஆனந்தப்படுத்துவதும் உண்டு. என் வாழ்க்கையிலும் அப்படிப்பட்ட ஒரு மறக்க முடியாத நிகழ்வு ஒன்று நடந்தது என்றால் பகவானுக்கு நான் எப்படி நன்றி கூறுவேன், என்ன கூறுவேன்? அவர் குழந்தைகளாகிய நம்மீது எவ்வளவு அன்பு வைத்துள்ளார் என்று நினைக்கும்போது எனக்கு ஆனந்த கண்ணீர் தான் வருகின்றது. ஒரு சிறிய அற்புத நிகழ்ச்சியை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

நான் தனியார் வங்கி ஒன்றில் பணி செய்து வருகின்றேன். பிரம்மா குமாரிகள் இயக்கத்தில் சேர்ந்து கடந்த 5 வருடங்களாக இராஜயோகம் கற்று வருகின்றேன். என் குடும்பத்தில் என் மகளும் (13 வயது) என்னுடன் வாரத்திற்கு ஒரு நாள் வருவார்கள். என் கணவர் வரவில்லை என்றாலும் பலவிதங் களில் உதவியாகத்தான் இருந்து வருகிறார். இரண்டு மூன்று முறை மதுபன் சென்று வந்துள்ளேன், இந்த வருடம் கூட பாபாவை சந்தித்து வந்தேன்.

உடல் ரீதியாக எனக்கு அநேகவிதமான நோய்கள் இருந்தாலும் பாபாவின் ஞானம் என்னுள் இருப்பதால் அதை ஒரு கர்ம கணக்காகவே எடுத்துக் கொண்டு வீட்டிலும், அலுவலகத்திலும் நல்ல முறையில் பணி செய்து வருகிறேன். பல வருடங்களாக எனக்கு இரண்டு கண்களிலும் ஏதோ ஒரு பிரச்சனை இருந்து மிகவும் தொல்லைக் கொடுத்துக் கொண்டே இருந்தது. பல கண் மருத்துவர்களையும், பார்த்து பல விதமான மருந்துகளை சாப்பிட்டு வந்தாலும் சிறிதும் குறைந்ததாக எனக்கு தெரிய வில்லை. இறுதியாக டாக்டர் ஆலோசனைப்படி எக்ஸ்ரே எடுத்து பார்த்த போது என் இரு கண்களிலும் **க்ளுக்கோமா** என்ற நோய் அதாவது பிளட் பிரஸர் மாதிரி கண்களில் ஏற்பட்டிருந்தது. அதன் அளவு 21-22 விகிதத் தில் இருந்தது. இதற்காக பிரசித்தி பெற்ற கண் மருத்துவர் ஒருவரிடம் சென்றேன். அவர் எனக்கு கண்களில் லேசர் ட்ரீட்மென்ட் செய்ய வேண்டும் என்றும் சிறிது நாட்கள் ஓய்வில் இருக்க வேண்டும் என்று கூறி அதற்கான நாளும் நேரத்தையும் கொடுத்து விட்டார்.

அந்த நாளுக்கு முந்திய நாள் இரவில் தூங்கப்போகும்முன் பாபாவின் நினைவில் இருக்கும்போது பாபா எனது எந்த கணக்கு வழக்கையும் நான் எளிதாக கடந்துவிடுவேன் உங்கள் உதவியால் என கூறி படுக்க சென்று விட்டேன். என் கணவர் எனது மகளிடம் விளையாட்டாக நாளைக்கு உங்கள் அம்மாவுக்கு கண் அப்ரேஷன் செய்யப் போகின்றார்கள் என்றும், உங்கள் அம்மா பாவம் அல்லவா? என அன்போடு கூறினார். இதை கேட்ட என் மகள் இதற்கு ஏன் கவலைப்படுகின்றீர்கள், **நமக்குத்தான் சுப்ரீம் டாக்டர் சிவபாபா இருக்கின்றாரே, அவரிடம் சொன்னால்**

**அப்ரேஷனை நல்லபடியாக செய்து விடுவாரே** என்று கூறினாள். இதை கேட்ட நான் சந்தோஷப்பட்டாலும் நானோ, என் கணவரோ அந்த குழந்தையின் சாதாரண வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை, சாதாரண மாகவே எடுத்துக் கொண்டோம், நானும் உடனே மறந்தும் விட்டேன். காலையில் அமிர்த வேளைக்கு எழுந்து முகம் கழுவி கண்களைப் பார்க்கும்போது எண் கண்கள் கோவைப்பழம் மாதிரி சிகப்பாக ஆப்ரேஷன் செய்ததுபோல் அச்சுறுத்தும் படி இருந்தது, இதைப்பார்த்த எனக்கு சிறிது பயம் வந்து விட்டது, எனக்கு மெட்ராஸ்-ஐ வந்து விட்டது, இன்றும் டரீட்மென்ட் எடுக்க முடியாது தான், என்ற கவலை வந்துவிட்டது. ஆனாலும் பாபாவிடம் நான் கூறினேன் பாபா இன்று என்ன ஆனாலும் சரி, கஷ்டப்பட்டாவது டாக்டரை போய் பார்க்கத் தான் வேண்டும் என்று கூறிவிட்டு சிறிது ஓய்வு எடுத்துக் கொண்டேன். சரியாக காலை 7 மணி அளவில் டாக்டர் கொடுத்த நேரப்படி மருத்துவமனை போய் சேர்ந்தோம். சிறிது நேரத்திற்கு பிறகு மருத்துவர் வந்து என் கண்களைப்பார்த்து இது எப்படி வந்தது? ஏன் இப்படி இருக்கின்றது? என்று கேட்டார். நானும் எனக்கு ஒன்றுமே தெரியவில்லை, இரவு படுக்கும்போது நன்றாகத்தான் இருந்தது, காலையில் எழுந்து பார்த்தால் இப்படி இருக்கின்றது, எனக்கு ட்ரீட் மென்ட் இப்போது செய்ய முடியுமா? அல்லது முடியாதா? என சிறிது கவலையோடு வினவினேன். டாக்டர் எனக்கு தைரியத்தை கொடுத்து பரிசோதனை செய்து பார்க்கலாம் என்று கூறி சில பரிசோதனைகளுக்குப் பிறகு கூறினார் உங்கள் கண்களுக்கு இப்போது லேசர் ட்ரீட்மென்ட் தேவையில்லை, பிரஸர் அளவு குறைந்துள்ளது, (17 ஆக) எப்படி குறைந்தது என்று தெரியவில்லை, ஏதோ அப்ரேஷன் நடந்தது மாதிரி உள்ளது என்று கூறினார். இவ்வாறு நடந்தது எப்படி என்று என் அறிவியலுக்கே தெரியவில்லை எல்லாம் கடவுள் செயல் தான் என்றும் கூறினார், மேலும் நீங்கள் மாதம் ஒரு முறை வந்து பரிசோதனை செய்துக் கொள்ளுங்கள், பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று தைரிய மூட்டினார். இப்போது தான் எனக்கு சாக் அடித்தது போல் பொறியில் தட்டியது என் மகள் கூறிய அந்த சாதாரண வார்த்தை, **ஆம் நமக்கு சுப்ரீம் டாக்டர் உள்ளாரே, அவரிடம் கூற வேண்டியது தானே என்று**. என் மகளின் வார்த்தைக்கு பாபா மதிப்பு கொடுத்து எனது இவ்வளவு பெரிய பிரச்சனையை எவ்வளவு எளிதாக தீர்த்து விட்டார், பாபாவுக்கும் என் மகளுக்கும் நன்றி கூறி ஆனந்தம் அடைந் தேன், நான் அலுவலகத்திற்கும் லீவு போட வில்லை, அன்றாட காரியங்களையும் சரியாக செய்து வருகின்றேன், இப்போது என் கண்களின் பிரச்சனை சிறிது சிறிதாக குறைந்து முன்னேற்றம் அடைந்து வருகின்றது. மேலும் நான் சிறிது மருந்தும் எடுத்துக் கொண்டு வருகின்றேன்.

ஆத்மா என்ற மூன்றாவது கண்ணை திறந்த பகவான் எனக்கு ஸ்தூல கண்களையும் திறந்து விட்டார் என்றால் அவர் என்னிடம் எவ்வளவு அன்பு வைத்துள்ளார் ஆஹா, பாபா நான் உங்களை ஒரு நாளும் மறக்கவே மாட்டேன், உங்களை விட்டு பிரியவும் மாட்டேன் என்ற உறுதி மொழியை அவருக்கு எனது அப்ரேஷன் பீஸாக கொடுத்துவிட்டேன். உண்மையில் அறிவியலால் செய்ய முடியாத காரியத்தை ஆண்டவன் நிச்சயமாக ஆச்சரிய மாக, அற்புதமாக, அமைதியாக செய்து முடிப்பார், என்ற உண்மையை அனுபவ பூர்வமாக தெரிந்துக் கொண்டேன். இவர் தான் உண்மையிலேயே சுப்ரீம் டாக்டர், வைத்திய நாதன், குழந்தைகளை கண்களின் இமையில் வைத்து பாதுகாக்கும் தந்தை என்பது உண்மை தானே!

# அறிவீர்களா, பிரம்மா குமாரிகள் யாரென்று?



இந்தியா, பிரிட்டனின் காலனியாக இருந்த காலம். கடந்த 75 ஆண்டுகளுக்கு முன் ஆண், பெண் குழந்தைகள் என மிகச் சிலரே மனமுவந்து ஏற்றுக் கொண்டு ஒன்று பட்டு பிரம்மா குமாரிகள் உலக ஆன்மீகப் பல்கலைக்கழகம் என்ற பெயரில் தங்கள் ஆன்மீக வாழ்க்கைப் பயணத்தைத் துவக்கினர். இந்த அற்புதப் பயணத்தில் தங்களுடைய வாழ்க்கையிலும், தங்களை நாடி வந்த எண்ணற்றவர் வாழ்க்கையிலும் அடைந்து விட்ட நூதன மாற்றங்கள் தான் எத்தனை மெச்சத்தக்க மகிமைக்குரிய ஒன்றாக ஆகி விட்டது!

இன்றைக்கு ஆடவர், பெண்டிர், இள மகளிர், இளைஞர் குழந்தைகள் என பலதரப் பட்ட வயதினரும் ஒன்றாக, ஒரே வகுப்பில் அமர்ந்து ஆன்மீகக் கல்வியினைப் பயின்று வரும் காட்சி, ஒரு கணம் சிந்தனையைத் தூண்டி வியப்பிலும் ஆழ்த்தி விடுகிறது. இத்தகைய காட்சிகள் இந்தியாவில் மட்டு மல்ல, உலகில் 137 நாடுகளில் 8500 மையங் களில் காணக்கிடைக்கும் காட்சியாகும். மேலும் இந்தியாவில் லக்ஷக்கணக்கான மக்கள் பிரம்மா குமாரிகள் இயக்கத்தின் ஆன்மீக கல்வி மற்றும் சுயமுன்னேற்றத்திற்கு உதவக்கூடிய அடிப்படையான வழிமுறைகள் பற்றிய நிகழ்ச்சி களை தொலைக்காட்சி மூலம் அறிந்து பயனடைந்து கொண்டுமிருக்கின்றனர். இதுபோன்ற இன்னும் பல மனித நேய சமூக ஒழுக்கம் பற்றிய வழிகாட்டுதல், அறிவுரைகள் இடம் பெற்றிருப்பது பலராலும் அங்கீகரிக்கப் பட்டுள்ளதும் வரவேற்கத்தக்க அம்சமாகும்.

இந்த இயக்கத்தின் வெளி நாட்டிலுள்ள மையங்கள் மூலமாகவும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சேவை அங்குள்ள மக்களின் கவனத்தைக் கவர்த்திருக்கிறது. இது மேலும் மேலும் தாக்கத்தையும், வரவேற்பையும் பெற்றுக் கொண்டுமிருக்கிறது. வளர்ச்சியடைந்து கொண்டும், பரவலாகிக் கொண்டிருப்பதும் மகிழ்ச்சி தரக்கூடியதாகவுள்ளது. பிரம்மா குமாரி கள் ஆன்மீகப் பல்கலைக்கழகம் உலகளவில் ஆன்மீகப்பண்புகளை வளர்க்க வேண்டும் என்ற அடிப்படையில் அமைந்திருக்கின்ற சிறந்த ஆன்மீகக் கல்வி நிறுவனம். இது ஐ.நா. சபையின் பொதுச்செய்தி இலாகாவில் பொருளாதார சமூகக் கூட்டமைப்பின் ஆலோசனைக் குழுவில், குழந்தைகள் நிதிக் கழகத்தில் அரசு சார்பற்ற ஆலோசகர் அந்தஸ்து பெற்றுள்ளதும் இவ்வியக்கத்திற்குக் கிடைத் திருக்கும். அங்கீகாரமாகும். இத்தகைய மக்கள் பணியும் வாழ்க்கைப் பண்புகளில் முன்னேற்றமும் இருந்தாலும் கூட, இந்த சேவையின் உண்மையான லக்ஷியத்தைப் புரிந்து கொள்ளாத காரணத்தால் சிலருடைய மனதில் அவ நம்பிக்கையும், சந்தேகமும், தயக்கமும் இருப்பதைக்காண முடிகிறது. ஆதலால் அவசியமான உண்மை விவரங்கள் என்ன என்று பார்ப்போம்.

### பிரம்மா குமாரிகள் இயக்கம், பெண் களுக்கு மட்டுமே உரித்தான ஒன்றா?

பிரம்மா குமாரிகள் என்ற வாசகத்தின் பொருள் பிரம்மாவின் புதல்விகள் என்பதாகும். இந்த அமைப்பின் நிறுவனர் பிரம்மா பாபா என்று அன்பாக அழைக்கப்படுகின்றார். இவருடைய தொலை நோக்குப் பார்வையில், தனி நபர் சுய முன்னேற்றத்திற்கும், மனித நேய உறவுக்கும் நற்பண்புகள் உதவக்கூடும் என உணர்ந்த காரணத்தால், குறிப்பாக பெண்களுக்கே உரித்தான பொறுமை, சகிப்புத் தன்மை, தியாக உணர்வு, அன்பு ஆகிய

பண்புகள் முன்னேற்றத்தில் அஸ்திவாரமாக அமையக்கூடும் எனக் கருதினார். ஆதலால் இதில் பெண்களை முன்னிலைப்படுத்தியும், ஆண்களை அவர்களுக்கே உரித்தான தகுதியுடையவர்களை இவர்களுக்கு உதவியாளர்களாகவும், நியமித்து நிமித்தமாக்கினார். இந்த அமைப்பின் நிர்வாகம் முழுவதும் பெண்களாலேயே நடத்தப்பட்டு வந்தாலும், இதில் பெரும்பாலானோர், சேவையிலேயே தங்களை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆதலால் பெண்கள் மட்டுமல்ல, அனைவருமே வருகை தந்து பயன் பெற வேண்டுமென்று அழைக்கப் படுகிறார்கள்.

## பிரம்மா குமாரிகள் வெண்ணிற ஆடை அணிவதன் நோக்கமென்ன?

பொதுவாக ஒவ்வொரு நிறத்திற்கும் ஒரு வகை மதிப்புண்டு. இதில் வெண்மை நிறம் தூய்மை, அமைதி எளிமை உண்மை ஆகிய வற்றை குறிப்பதாக நம்பப்படுகிறது. இந்த பண்புகளை இராஜயோகம் கற்பிக்கும் பிரம்மா குமாரிகள் விரும்புவதால், வெள்ளை நிறத்தில் ஆடை அணியும் பழக்கமுடையவர்களாக இருக்கிறார்கள். முக்கியமாக இராஜயோக நிலையங்களில் பொறுப்பு சகோதரிகளாக இருப்பவர்கள் வெண்மை நிற ஆடைகளை மட்டுமே அணிகின்றார்கள். மேலும் ஆன்மீகப் பயணம் மேற்கொண்டிருப்பவர்கள், கறை படியாத மனமுடையவர்களாக இருக்க வேண்டும் என்பதை நினைவுறுத்தும் முகமாகவும் வெண்ணிற ஆடை இருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் மற்றவர்களுக்கு இந்த மாதிரி சீருடை தான் அணிய வேண்டுமென்ற நிர்பந்தம் இல்லை. இராஜயோகா பயிற்சி வகுப்பிற்கு வருபவர்கள் வழக்கமாக அணியும், சாதாரண ஆடை அணிந்து வந்தாலே போதுமானது, எனினும் இம்மாதிரியாக காலை, மாலை வகுப்பிற்கு வருபவர்களும் கூட தாங்களாகவே விருப்பப்பட்டு வெள்ளை ஆடை அணிந்து வருவதும் உண்டு.

## இந்த அமைப்பிற்கு, எங்கிருந்து பணம் கிடைக்கிறது?

இந்த அமைப்பின் தலைமைப் பொறுப்பும், நிர்வாகமும் ஆன்மீகக் கல்விப் பணியும் அர்ப்பணிக்கப்பட்ட பெண்மணிகளின் பொறுப்பில் உள்ளது. மேலும் இக்கல்விப்பணி அனைத்தும் இலவசமாகவே அளிக்கப்படு கிறது. இதன் நிர்வாகம் இதில் பயனடைந்தவர் கள் தாமாகவே முன்வந்து அளிக்கும் நன்கொடை மூலமாக பராமரிக்கப்படுகிறது. இந்நிறுவனத்தின் உள்கட்டமைப்பின் சொந்த செலவினங்களுக்காக மற்றவர்களிடமிருந்து நன்கொடை பெறப்படுவதில்லை. மேலும் அங்கத்தினர் சந்தா என்றும் எதுவுமில்லை. இந்த அமைப்பு எல்லோருடைய நன்மைக்காக இறைவனால் படைக்கப்பட்ட வேள்வி. ஆதலால் தடைஏதுமில்லை.

## ஆன்மீக வளர்ச்சிக்கு பிரம்மச்சர்யம் அவசியமா?

தன்னைப்பற்றிய உண்மைகளை முழுமை யாக உணர வேண்டும். அனுபவம் செய்ய வேண்டும் என்று விரும்புபவர்கள், சில நியமங்களைக் கடைப்பிடிப்பது இன்றியமை யாததாகும். நியமங்கள் கடைப்பிடிக்கப்படுவது உகந்தது என பரிந்துரைக்கப்படுவது உண்மையே. கண்களால் பார்ப்பது, காதால் கேட்பது மனதோடு சம்மந்தப்பட்ட கர்மேந்திரி யங்களாக இருக்கின்றன. விஞ்ஞானம் முன்னேற்றமடைந்திருக்கும் இன்றைய கால கட்டத்தில் காணும் காட்சிகளும், வாய்மொழி ஒலியும், மனதிற்கு உகந்ததாக உள்ளதா என்பது கேள்விக்குறியே. ஆதலால் வாழ்வில் நற்பண்புகளை நடைமுறைப்படுத்த விரும்புவோர், தான் நம்புகின்ற கடவுளோடு

உள்ளன்போடு சம்மந்தம் அல்லது தொடர்பு கொள்ள வேண்டும் என்ற லக்ஷியம் உள்ளவர்களுக்கு நியமங்கள் ஒரு தடைக்கல் அல்ல. சிரமமானது மல்ல. நற்பண்புகளை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று விரும்புபவர் களுக்கு பிரம்மச்சர்ய விரதம் உதவுவதாக இருக்கின்றது. உலகாயத விஷயங்கள் மீதான அதிக ஈடுபாட்டிலிருந்து மனதையும், புத்தியையும் விலக்கி மட்டுப் படுத்தவும், சூட்சுமமான ஞானேந்திரியங்களின் தன்மையை சுத்தப்படுத்தவும், சீதளப்படுத்த வும் உதவுகிறது. தேகாபிமான உணர்வுகள் வலுவிழந்து ஆத்மீக உணர்வுகள் மேலோங் கவும் உண்மையான ஆன்மீக அன்பை அளிக்கவும் பெறவும் பெரிதும் உதவுகிறது.

## பிரம்மா குமாரிகள் உணவு உண்ணும் விஷயத்தில் கட்டுப்பாடாக இருப்பது ஏன்?

உணவு எப்படியோ அப்படி மனம் என்று சொல்லப்டுவதுண்டு. உடல் ஆரோக்கியத்திற்கு மரக்கறி உணவே சிறந்தது என்றும் சொல்லப்படுகிறது. மது, போதை மருந்து, புகை யிலை போன்ற வஸ்துக்களைத் தவிர்ப்பது, மனத் தெளிவுக்கும், ஒரு முகப்படுத்து தலுக்கும், ஆன்மீக முன்னேற்றத்திற்கும் சூட்சுமமாக ஆழ்ந்து லயித்திருக்கவும் உகந்ததாக இருக்கின்றது.

உணவுப் பொருளின் ஸ்தூல உருவிற்கப் பாற்பட்டு, அந்த உணவுப் பொருளில் சூட்சும மாக அடங்கியுள்ள சத்துக்கள் உண்பவரைப் பாதிப்பிற்குள்ளாக்குகிறது. அதாவது உணவு தயாரிப்பவருடைய சூட்சுமமான மனோ நிலையும் கூட உணவில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இது உண்ணுபவர் மீதும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. ஆகவே தான் பிரம்மா குமாரிகள் உணவு தயாரிக்கும் போதும், உண்ணும் போதும் மன அமைதியோடிருக்கிறார்கள். இம்மாதிரி நிலையிலி ருந்து தயாரிக்கப்டும் உணவு ஆன்மீக முன்னேற்றத்திற்கு உதவுவதாக இருக்கிறது. ஆதலால் இம்மாதிரியான வழிமுறைகளைக் கடைப்பிடிக்காமல், தயாரிக்கப்பட்ட உணவை பிரம்மா குமாரிகள் ஏற்பதைத் தவிர்க்கிறார்கள்.

## பிரம்மா குமாரிகள் கணவன், மனைவியை சகோதரர் சகோதரியாக ஆக்குவது உண்மையா?

சட்டப்படியோ, ஜீவ சாஸ்திர ரீதியாகவோ கணவனும், மனைவியும் சகோதர சகோதரியாக முடியாது. ஆனால் ஆன்மீக அடிப்படை யிலான பூரணத்துவத்தை அடைவதற்கான ஒரு வழி என்ற முறையில் ஒருவர்க்கொருவர் புரிந்து கொண்டு இணக்கமுள்ள அன்பான மரியாதையுடன் கூடிய உறவை விருத்தி செய்து கொள்வதாகும். நாம் ஒவ்வொருவரும் ஒரு ஆத்மா அனைவரும் ஆத்மாக்களே, ஒரு தந்தையின் குழந்தைகள். ஆதலால் ஒருவர்க் கொருவர் சகோதரர்களே என்ற சகோதரத்துவ விழிப்புணர்வு, உண்மை நிலையை உணர்த்து வதாக இருக்கின்றது. எப்போது ஆன்மீக உணர்வு வலுப்பெற்று விடுகிறதோ அப்போது இதுவரையிலும் மற்றவர்களுடனான தொடர்பில் இருந்து வந்த இனம், மதம், பால், தேசீயம், சமுதாய அந்தஸ்து ஆகியவற்றில் தானாகவே மாற்றம் உண்டாகி விடுகிறது. இதன் காரணமாக பிறருடனான அணுகு முறையில் அமைதியும் நல்லிணக்கமும் இயல் பான ஒன்றாக ஆகிவிடுகிறது. இம்மாற்றம் கணவன், மனைவிக்கிடையே மட்டுமல்ல, குடும்பத்தைச் சார்ந்த மற்றவர் களுடனான உறவிலும் வேலை பார்க்கும் அலுவலகத்திலும் சமுதாயத்திலும் உண்டாகிறது.

## பிரம்மா குமாரிகள் மக்களை வசீகரணம் செய்ய முயற்சி செய்கிறார்களா?

இராஜயோகக் கல்வி கற்றுக் கொள்வதற் காக நிலையங்களை நாடி வருவோர் ஆரம்ப பாடத்தைப்பற்றி பிரம்மா குமாரிகள் சகோதரி

களிடம் அறிந்து கொண்டபின், தினந்தோறும் பாடம் கற்க, தவறாமல் வருகின்ற மாணவர்கள் ஆகிவிடுகின்றனர். இங்கு கற்பிக்கப்படும் பாடம் எல்லாம் வல்ல பரமாத்மா பிரம்மாவின் சரீரத்தை ஆதாரமாகக் கொண்டு அளித்த ஆன்மீக ஞானம். இதனை வேறு எந்த ஒரு மனிதரும் அறிந்திருக்கவில்லை. ஆதலால் இந்த ஞானம் மக்களை வசீகரிக்கலாம். இதற்கு மாறாக, இது பிரம்மா குமாரிகளினுடைய வசீகரணம் என்று யாராவது கருதுவார்களே யானால் இது முற்றிலும் தவறான அபிப்பிராயம். இங்கு வருபவர்களுக்கு அளிக்கப்படும் ஞானப்பாடம், நான் ஒரு ஆத்மா. இந்த உடல் அல்ல. ஆத்மா சைத்தன்யமானது, அழிவற்றது. உடல் ஜடம் அழியக்கூடியது. ஆத்மா உடலி லுள்ள கர்மேந்திரியங்கள் மூலமாகக் காரியம் செய்கிறது. ஆத்மாவில் தெய்வீக ஞானம், குணம், சக்திகள் உள்ளன. நாம் செய்யும் காரியங்களில் இது நடைமுறையில் பிரதிபலி க்க வேணடும். இதற்கு பயிற்சி அவசியமாகிறது. இது அன்பு, அமைதி, நல்லிணக்க உறவை மேம் படுத்த உதவுகிறது. சுருங்கச் சொன்னால் சாதாரணமாக இருக்கின்ற மனிதன், தெய்வீக நிலைக்கு உயர முடியும். இதனைப் புரிந்து கொள்பவர்கள், ஒருவர்கொருவர் உடலைப் பார்ப்பதற்குப் பதிலாக ஒவ்வொருவர் முகத்திலும் இரு புருவமத்தியில் இருக்கும் ஆத்மாவை கண்கள் மூலமாகப் பார்ப்பதில் கவனம் வைக்கிறார்கள். இது தேகாபிமானத்திலிருந்து ஆத்ம அபிமானியாவதற்காக பரமாத்மாவாகிய இறைவன் கற்பிக்கின்ற நியமம். இறைவன் அன்று படைத்த மனிதன் தெய்வீக குணங்கள் நிறைந்தவனாக இருந்தான். இடைவிடாது சுற்றிக் கொண்டே யிருக்கும் 5000 வருட காலச் சக்கரத்தில் தெய்வீக மனிதன் காலத்தால் பல பிறவிகள் எடுத்த பின்னர் நாளடைவில் சர்வ சாதாரண மனிதனாகி விட்டான். தெய்வீக குணமுடைய வனாக இருந்தபோது சுகமும், தீய குணமுடை யவனாகி விட்ட பின் துன்பமும் வாழ்க்கை அனுபவங்க்ளாகி விட்டன. காலச்சுற்றின் இறுதி நேரமாக இருக்கின்ற இப்போது சாதாரண மனித நிலையிலிருந்து, தெய்வீக மனித நிலைக்கு உயர வேண்டும். இதற்காக ஆத்ம அபிமானியாவதற்கு அவசியமான ஞானமும், பயிற்சியும் வேண்டும். ஆதலால் இப்போது, நமக்கிருக்கின்ற குறைவான அவகாசத்தைப் பயன்படுத்திக் கொண்டால் நீங்களும் ஆத்ம அபிமானி ஆகலாம். ஆக வேண்டும் என்று விரும்புங்கள். நீங்கள் அடையப் பெறுவீர்கள்.

**அவ குணங்களைப் பார்ப்பதை தவிர்க்கும்போது**
**ஞானம் என்ற மூன்றாது கண் திறக்கப்படுகிறது.**

**திருப்தி என்ற ஆயுதம் இருக்கின்ற இடத்தில்**
**பேராசை என்ற பூதம் நெருங்க முடியாது**

**மெய்ப் பொருளை (பரமாத்மாவை) நினைவு செய்யும் போது**
**மெய்யின் (உடல்) உணர்வு எளிதாக விலகும் என்பது மெய் (உண்மை)**

**உங்களிடமுள்ள குணத்தை நீங்கள் பார்க்க விரும்புகிறீர்களா?**
**மனக்கண்ணாடியில் பாருங்கள்.**
**முகம் பார்க்கும் கண்ணாடியில் குணம் தெரிவதில்லை.**



# குடும்பம் - பண்புகள்

பி.கு. சுவாதி, சென்னை

ஓர் உற்பத்தி திறன் கொண்ட தொழிற்சாலையில் உற்பத்தியாகும் பொருட்களில் தயாரானவற்றில் ஒரு சில பொருட்கள் சேத மடைந்து விட்டால் அது தேசத்திற்கு ஒன்றும் மிகப்பெரிய நஷ்டமாக இருந்து விடாது. நஷ்டமடைந்த பொருட்களை மீண்டும் மறு உற்பத்தி வாயிலாக சீர் செய்து விடமுடியும். அல்லது குறைத்துக் கொள்ள முடியும். ஆனால் மனித வாழ்க்கையில், குடும்பத்தில் பிளவு ஏற்படும் எனில் அதன் பாதிப்பு சமுதாயம், தேசம் மற்றும் உலகம் வரை தாக்கம் ஏற்படுவதை காண முடிகின்றது. ஆகவே தான் உலகத்தில் அனைத்திலும் முதன்மையான காரியம் எதுவெனில் ஓர் குழந்தைக்கு நல்ல பழக்க வழக்கங்களை கற்றுத் தருவதேயாகும். இதில் நேரத்தை கொடுக்க வேண்டியி ருந்தாலும் கூட நேரத்தை ஈடுபடுத்த வேண்டும், சக்தியை ஈடுபடுத்த வேண்டியிருப் பினும் கூட ஈடுபடுத்த வேண்டும் மேலும் பொருட்களை ஈடுபடுத்த வேண்டியிருப்பினும் கூட சிறிதளவு ஈடுபடுத்த தான் வேண்டும். ஏனெனில் தாய் தந்தையரின் தலையாய கடமை யாவது நல்ல பழக்க வழக்கங்களை கற்றுத் தருவதேயாகும். இதனை நாம் ஒவ்வொரு வரும் உணர்ந்தவர் களாக இருந்த போதிலும், நடைமுறை சிரமங்கள் தடைக்கல்லாகவே இருந்து கொண்டிருக்கிறது.

## குடும்பத்தில் பண்புகளின் முக்கியத்துவம்:

மனிதர்கள் உலகாயத விசயங்களில் கட்டுண்டு இரவு பகலாக முயற்சி செய்து எப்படியாவது செல்வத்தை சம்பாதனை செய்து சமுாயத்தில் அங்கீகாரத்தை அடைந்து விட விரும்புகிறார்கள். ஆனால் எவ்வாறு போர்வையை ஒருபுறம் மட்டும் அதிகமாக இழுத்துக் கொண்டு விடும்போது சரீரத்தின் மற்றொரு புறம் குளிரில் நடுங்க வேண்டி யிருக்கும். அவ்வாறு தான் செல்வம் சேர்க்க வேண்டும் - சேர்க்க வேண்டும் என்ற ஆர்வத்தினால் அந்தஸ்தை பெற்று விட்டாலும் மறுபுறம் செல்வத்தை சேர்ப்பதில் அதிகமான அளவு நேரத்தை எடுத்துக் கொண்டு விடுவதால் குடும்பத்தில் குழந்தைகளின் வாழ்க்கை பண்புகளிலிருந்து விஞ்சிக்கப்பட செய்து விடுகிறார்கள்.

பண்புகளை இழந்த குழந்தைகளைக் கொண்டு பெற்றோர்களால் எதுவும் செய்து விட முடியாது. இதற்கு காரணம் என்ன வென்றால் ஒரு புறமாக செல்வத்தில் நாட்டம் கொண்டு மற்றொரு புறம் நற்பண்புகளில் கவனமின்மை தான்.

## இளைஞர் சமுதாயத்தின் நிலை:

இளமைப் பருவ காலத்தில் நன்மை மேலும் தீமையை பார்த்து ஆராய்ந்து பார்க்கும் தன்மையில்லாத காரணத்தால் இளைஞர்கள் தவறான பாதைகளில் சென்று வாழ்க்கையை சீர்குலைத்துக் கொள்கிறார்கள் என்பதை கண்கூடாக நம்மால் காண முடிகின்றது அல்லவா. சினிமா, டி.வி. போன்ற பொழுது போக்கு சாதனங்களினால் நல்லவற்றை எடுத்துக் கொள்வதற்குப் பதிலாக அதில் வெளி வரும் எதிர்மறை விசயங்களை மட்டும் பார்த்து நடைமுறைப்படுத்துவதிலும் முனைப் பாக இருந்து விடுகிறார்கள் சில இளைஞர்கள். இதன் தாக்கம் மற்றும் விளைவு குடும்பத்திற் குள் சண்டை, சச்சரவு ஏற்படுவது மட்டு மில்லாது சில சமயங்களில் அது பெரும் துன்பம் வரையிலும் முடிந்து விடுகிறது. மாணவர்கள் பள்ளி மேலும் டியூசன் செல்வதாக பெற்றோர்களிடம் கூறிவிட்டு தவறான நண்பர்களின் சேர்க்கையினால் படிப்பு மேலும் தனித்திறமைகளில் ஆர்வத்தை இழந்து விடும் வண்ணமாக இருந்துவிடுகிறது. ஆகவே

தற்கால குடும்பத்தில் இளைஞர்களின் பாதுகாப்பிற்கு பெற்றோர்கள் அவர்களின் குழந்தை பருவத்திலிருந்தே நல்ல சேர்க்கை மற்றும் பண்புகளைப் பற்றிய அறிவுரைகளின் கவசத்தினை அணிவித்திருக்க வேண்டும்.

## இது பெரிய விசயம் இல்லை ஆனால் அவசியமான விசயமாகும்

தாய் தந்தையற்குள் சண்டை சச்சரவாக இருக்கலாம் அல்லது தங்களுக்குள் பிரச்சினை இருக்கலாம் - இந்த முரண்பாடுகளை பெரியவர் களாகிய பின்னும் கற்றுக் கொள்வதில்லை. ஆகவே தான் குழந்தையை தோளில் அரவணைக்கும் வயது முதலேயே அவர் களுக்கு நல்ல செய்திகளை காதில் போட்டு விடவேண்டும். பலருடைய மனதில் தோன்றுவது என்னவென்றால் சிறிய குழந்தை களாகிய இவர்களுக்கு இத்தனை பெரிய விசயங்களை அறிவுறுத்தினால் புரிந்து கொள்வார்களா என்ன? ஆனால் இது பெரிய விசயம் இல்லை. மாறாக உண்மையான மேலும் அவசியமான விசயமாகும். அவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கு. முன்பு 30 வயதில் கற்று கொண்ட விசயங்களை இன்றைய குழந்தைகள் 8-10 வயதில் கற்றுக் கொள்கிறார்கள் எனும்போது நீங்கள் போதிக்கும் நல்ல விசயங் களை கற்றுக் கொள்ள முடியாதா என்ன?

## எதனை தருகின்றோம் அதனை அடை கின்றோம்:

குழந்தைகளுக்கு நம்முடைய நேரத்தை தர வேண்டும். ஆகையால் சரியான முறையில் சம்பாதித்தல் என்று ஒரு புறம் இருப்பினும் கூட உழைத்த பணத்தை சரியான விதத்தில் குழந்தைகள் செலவு செய்தல் வேண்டும் என்பது மற்றொரு புறமாகும்.

ஆகவே நம்முடைய நியாய தராசில் பார்க்க வேண்டும். தராசு எந்த பக்கமாக உள்ளது அல்லது சமமாக உள்ளதா? இவ்வாறு லௌகீக தாய் தந்தையனருக்கு குழந்தை களையும், குடும்பத்தையும் செம்மையோடு நடத்த வேண்டிய பொறுப்பு இருப்பதும் கூட நடைமுறையில் உள்ள விசயம் தான் ஆனால் அனைத்து மனித ஆத்மாக்களின் தந்தையாக உள்ள பரமபிதா பரமாத்மா தந்தையாக இருந்து ஈஸ்வரிய ஞானம், குணம், சக்திகள் கொடுக்கிறார் அதன் ஆதாரத்தில் அனைத்து பௌதீக சுகம், சாதனம் அடையும் வழியும் கிடைக்கின்றது. ஆகவே தான் ஒவ்வொரு பொற்றோர்களும் தனது நேரத்தை சிறிதளவு ஒதுக்கிக் கொண்டு இப்பூவுலகில் அவதரித் துள்ள இறைவனை அறிந்து கொள்வதுடன் அனைவரின் தாய்-தந்தை யான அவரிட மிருந்து ஆஸ்தியை எடுத்துக் கொள்ள முற்பட்டால் ஒவ்வொரு யுகத்திலும் தனது குழந்தைகளுக்கு தருவதற்கு தன்னிடம் நிறைவாக இருக்கும் என்பது நிச்சயிக்கப்பட்ட உண்மையாகும். தன்னுடன் சேர்ந்து தன்னுடைய குழந்தைகளுக்கும் இந்த இறை ஆஸ்தியை எடுத்துக் கொள்ள கற்றுத் தந்தீர்கள் எனில் அவர்கள் ஒரு பொழுதும் சைத்தானின் சொத்தான (தீய பழக்கங்கள், தவறான சேர்க்கை) எதிர்மறை விசயங்களில் ஈடுபடுவதிலிருந்து பாதுகாப்பாக இருந்து விடுவார்கள். ஏனென்றால் இந்த இதழின் இதற்கு முந்தைய கட்டுரைகளில் நீங்கள் படித்திருக்கக்கூடும் குழந்தை பிராயத்திலேயே எவ்வாறு தங்களுடைய குழந்தைகளை தெய்வீகப் பணியில் ஈடுபடுத்த தாய்மார்கள் முற்பட்டனர் என்று. எனவே முன்மாதிரியான பெற்றோர் களாக இருந்து வான்புகழ் வள்ளுவனின் குறளான ஈன்ற பொழுது பெரிதுவக்கும் தாயாக அல்லாது தன் குழந்தைகளை சான்றோன் என உலகினர் போற்றும் படியாக வாழ்க்கைக்கான அஸ்திவாரத்தை அமைத்துக் தந்து பெரிதுவக்க வேண்டும் என்பதே இச்சிறப்புக் கட்டுரையின் நோக்கமாகும்.

இறை ஞானத்தினால் குடும்பத்தினை கோயிலாக அமைப்போம். உலகத்தை ஆன்மீக அன்பு எனும் கயிற்றினால் ஓர் குடும்பத்திற்குள் கொண்டு வர கை கொடுப்போம்.

# அறிவிப்பு கடிதம் 3.12.2011

## பி.கு. ரமேஷ் ஷா, மதுபன்



சாந்திவன் மன்மோகினி வளாகத்தில் காட்லி உட் ஸ்டுடியோவுக்காக நான்கு மாடிக் கட்டிடம் ஒன்று தயாராகிக் கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் எல்லோரும் அறிந்திருக்கக் கூடும். இந்த கட்டிடக் கட்டமைப்பு வேலை மிகத் துரித கதியில் நடந்து கொண்டிருக்கிறது. 30.11.2011ம் நாளன்று, மேடையில் அவ்யக்த பாபாவிடம் பாபா! நாங்கள் காட்லி உட் ஸ்டுடியோவுக்காக தரை தளத்தில் இரண்டு சிறிய ஸ்டுடியோவும், முதல் மாடியில் ஒரு பெரிய ஸ்டுடியோவும் ஜனவரி மாதத்திற்குள் தயாராகி விடும் என்றும், 2, 3 மற்றும் 4வது மாடிக்கான கட்டுமானப் பணியும் ஏறக்குறைய ஜனவரி 18க்குள் முடிந்துவிடும் என்ற திட்டம் பற்றிக் கூறினேன். இதன் பிறகு 18 முதல் 26 ஜனவரி 2012க்குள் இதர உள்ளமைப்பு அலங்கார வேலைகள் அனைத்தும் முடிவடைந்து 26, 27, 28 ஜனவரி 2012க்கு மிடையே ஏதாவதொரு நாளில் இந்த ஸ்டியோ திறப்பு விழா நடத்த வேண்டுமென்று நினைக் கின்றோம். இதற்கு பிராண அவ்யக்த பாப்தாதா தன்னுடைய வரதானி ஸ்ரீமத் அளித்தபடியே, நல்லது! செய்யலாம் என்று கூறினார். இதன் பிறகு நான் மரியாதைக்குரிய தாதி ஜனாகி அவர்களிடம் திறப்பு விழா பற்றி கேட்டேன். அவர்களும் கூட ஜனவரி மாதம் நம்முடைய பிரம்மா பாபாவின் நினைவு மாதமாக இருப்ப தால், ஜனவரி மாதத்திலேயே ஸ்டுடியோ திறப்பு விழா செய்யலாம் என்றார்.

ஆதலால் எல்லோருடைய சுப சங்கல்பத்தின் மூலமாக இந்த காட்லி உட் ஸ்டுடியோ திறப்பு விழா 26, 27, 28 ஜனவரி மாதத்தில் நடக்கும். இதன் பிறகு 2.2.2012ல் அவ்யக்த பாப்தாதாவிடமிருந்து இதற்கான விசேஷ ஸ்ரீமத் பெறப்படும். மேலும் இந்த மூன்று ஸ்டுடியோக்களிலும் வெவ்வேறு விதமான செயல்பாடுகளுக்கான காரியங்கள் ஆரம்பித்து வைக்கப்படும். ஆகையால் இந்த அறிவிப்பு கடிதம் இன்று அனுப்பப்படுகிறது. நம்முடைய தெய்வீக பரிவாரத்தில், இதுவரையிலும் கூட நம் அறிந்திராத அநேக ரத்தினங்கள் மறைந்திருக்கின்றார்கள். இந்தக் கடிதத்தின் மூலமாக, அவர்கள் அனை வருக்கும் அழைப்பு விடுக்கிறோம். ஏனெனில் யார் யாரிடம் என்னென்ன கலைகள் உள்ளதோ அந்தக் கலைகள் மூலமாக, ஸ்டுடியோ மூலம் நடக்கவிருக்கின்ற ஈஸ்வரிய சேவையில் நல்ல சகயோகிகளாக ஆக முடியும். ஆதலால் நீங்கள் உங்களிடமுள்ள கலைகள், அனுபவங் கள் பற்றிய விவரங்களை எழுத்து மூலம் பாம்பே டிரஸ்ட் அலுவலகத்திற்கு எவ்வளவு சீக்கிரமாக அனுப்ப முடியுமோ, அவ்வளவு சீக்கிரமாக அனுப்புவதற்கான முயற்சி செய்யுங்கள்.

உங்களிடம் டயலாக், விவாதம், பிலீம், டிராமா மற்றும் அநேகவிதமான விவரங்கள் அல்லது ஸ்டுடியோ நடத்துவது சம்மந்தமான அனுபவம் இருக்குமானால், அதனை தங்களுடைய சுய அறிமுகம் பற்றிய முழு விவரங்களை பாம்பே டிரஸ்ட் தலைமை யகத்திற்கு அனுப்பி வைக்கவும். இதன் மூலம் உங்களிடமுள்ள பலவிதமான கலைகளை பயன்படுத்திக் கொள்ள முடியும். எந்த லக்ஷியத்தில் பாப்தாதா நம்முடைய மரியாதைக் குரிய தாதிமார்கள் மற்றும் மூத்த சகோதரர்கள் ஸ்டுடியோ நிர்மாணத்திற்கான காரியத்தில் நம்பிக்கையோடு எதிர் பார்த்துக் கொண்டிருக் கிறார்களோ அது சம்பூரண ரீதியில் நிறை வேறக்கூடும்.

ஆகவே இதன் மூலம் டி.வி. சேனல்கள்

மூலம் ஈஸ்வரிய சேவையில் நிலா ஒளியின் பிரகாசம் பளிச்சிடக்கூடும். இந்த அறிவிப்பை நம்முடைய யக்ஞத்திலிருந்து பிரசுரமாகக்கூடிய மாதாந்திர, இதழ்களான ஞானாமிருதம், இந்தி, குஜராத்தி, மராட்டி, தமிழ், தெலுங்கு, ஒரியா ஆகிய மொழிகளில் மொழி பெயர்ப்பு செய்து பிரசுரிக்க வேண்டும் . இதன் கூடவே பத்திர புஷ்பம் மூலமாகவும் கூட இந்த அறிவிப்பு அனுப்பப்படும். மேலும் நம்முடைய பரிவாரத்தினர் அனைவருக்கும் இந்த விவரம் தெரிய வரும். உங்கள் அனைவருடைய சகயோகத்திற்காக முதலிலேயே நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். கூடவே ஸ்டுடியோ பவன் போட்டோவும் அனுப்பப்படுகிறது. தயவு செய்து அறிவிப்பு கடிதப் பிரசுரத்துடன் இதனையும் மிக அவசியமாக பிரசுரிக்க வேண்டும்.

தங்களுடைய சகயோகத்திற்கு நன்றி,
ஈஸ்வரிய சேவையில்
தங்களுடைய தெய்வீக சகோதரர்
பி.கே. ரமேஷ் ஷா

# கீதை உபதேசம் செய்த பகவான் யார்?

கீதை பகவான் வாக்கு என புரிந்து கொண்டுள்ளோம். ஆனால் பகவான் அசரீரியானவரா? தேகதாரியா? பகவான் பிறப்பு, இறப்பு, சுகம், துக்கம், இன்பம், துன்பம் அனைத்திற்கும் அப்பாற்பட்டவர். இதையும் ஏற்றுக் கொண்டுள்ளோம். ஆதலால் பகவான் ஜோதி சொரூபமானவர். இதன் காரணமாகவே, வழிபடுவதற்காக, ஒளியினை, லிங்க ரூபத்தில் உருவகம் செய்து பிரதிஷ்டை செய்து, வணங்குகின்றோம். கீதை மகாவாக்கியத்தின்படி பகவான் சூரியனைப் போன்று பிரகாசமானவர் என்றும், திவ்ய திருஷ்டி மூலமே காண முடியும் என்றும் கூறப்படுகிறது. ஆதலால் பகவானுடைய ரூபம் ஜோதி சொரூபமாகும். மேலும் கீதையில் ஜனார்த்தனன், கேஷவன், ஹிருஷிகேஷ், கோவிந்தன், அச்சுதன் என்ற பெயர்களெல்லாம் பிரயோகம் செய்யப்பட்டிருப்பது கவனத்திற்குரிய ஒன்றாக இருக்கின்றது. இப்பெயர்களெல்லாமே சொரூபத்தை உணர்த்தும் அறிமுகமாக அமைந்திருக்கும்போது, கிருஷ்ணர் என்ற பெயர் மட்டும் ஒரு தேகதாரியைக் குறிப்பதாக அர்த்தம் செய்வது உசிதமற்ற முடிவாகவே இருக்க முடியும். உதாரணமாக, ஜனங்களுடைய பிரார்த்தனையை ஏற்பவன் என்ற காரணத்தினால் ஜனாத்தனன் என்றும், பிரம்மா, விஷ்ணு, சங்கர் மூலமாகச் கடமையாற்றுவதன் காரணமாக கேசவன் என்றும் அழைக்கப்படுகின்றார். இதைப்போலவே ஆனந்த சொரூபன் அல்லது ஆகர்ஷண மூர்த்தியாயிருப்பதன் காரணமாகவே கிருஷ்ணன் என்ற பெயரும் பிரயோகிக்கப்பட்டுள்ளது. ஆதலால் இந்த குண விசேஷங்களுக்குரிய உருவம் ஜோதி சொரூபம் என்பதை எப்படி மறந்து விடமுடியும். மேலும் பகவான் பரமாத்மா என்றும் பரந்தாமன் என்றும் அழைக்கப்படுகின்றார். அதர்மம் அதன் உச்சத்தை அடைந்து விடும்போதெல்லாம் தர்மத்தை ஸ்தாபனை செய்வதற்காக அவதரிக்கிறேன் என்பதாக உள்ளது. இதன் மூலம் உலக நாடகம் ஒரு காலச்சக்கரத்திற்குள் அமைந்திருப்பது உறுதியாகிறது. இவ்வாறு வேறு யாராலும் செய்யமுடியாத நன்மையை பரமாத்மா செய்கின்றார் என்பதன் காரணமாக, காரணப்பெயராக **சிவா** எனவும் அழைக்கப்படுகின்றார். பகவான் அசரீரியானவர், பரமாத்மா. கீதை பகவான் வாக்கு என்பதால் கீதையின் நாயகன் சிவபரமாத்மா என்பது தெளிவாகிறது.

# மன மாசும் - இயற்கை மாசும்



இன்று முழு உலகமும் பூதாகரமான நிலையை நோக்கி சென்று கொண்டுள்ளது என்பது அனைவரும் அறிந்ததே, ஆனால் இதன் மாற்றத்தின் இறுதி உறுதியே!

ஜலம், வாயு மற்றும் அக்னியினால் ஏற்படும் பேராபத்து உயிரினங்களுக்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்திக் கொண்டிருக் கின்றது. மேலும் நிகழ்காலத்தில் அதிகரித்து வரும் ஜனத்தொகை ஒரு புறம் இருக்க அதிகமான பணம் சம்பாதித்து சேர்க்க வேண்டும் என்ற விருப்பம் மனிதனின் குணாதிசயங்களை மாற்றி விட்டது, இதன் வெளிப்பாடு தான் இன்று அதிகரித்து வரும் இயந்திரமயமான வாழ்க்கை. பசுஞ்சோலையாக இருந்த கிராமங்களில் இரசாயண ஆலைகள் நிறைந்து மெல்லமெல்ல மாசுகளை ஏற்படுத்தி வருகின்றது. ஆலைகளிலிருந்து வெளிப்படும் சுத்திகரிக்கப்படாத கழிவுகள் நதிகள் மேலும் நீரோடைகளில் கலந்து விடுவதால் தண்ணீர் பருகுவதற்கு பயனற்றதாகி விடுகிறது. இவ்வாறு இயற்கையானது பல்வேறு விதத்தில் மாசு ஏற்படுவதை பற்றி பார்க்கும் போது நிச்சயமாக நினைக்கத் தூண்டுகிறது, குரங்கின் கையில் அகப்பட்ட பூமாலை என. ஒரு புறம் இவ்வாறு இருக்கும்போது, இயற்கையின் ஐந்து தத்துவங்களான பூமி, ஜலம், வாயு, அக்னி மேலும் ஆகாயம் இவற்றிற்கும் மனிதனின் ஐந்து புலன்களுக்கும் ஆழமான மற்றும் சூட்சுமமான தொடர்பும் உள்ளது.

கண்கள் பார்க்கும் சக்தி உடையது, காதுகள் கேட்கும் கச்தி உடையது, மூக்கு நுகரும் சக்தி உடையது, வாய் அல்லது நாக்கு ருசிகளை அறியும் சக்தி உடையது மற்றும் தோல் ஸ்பரிசத்தை உணரும் சக்தி உடையது, இந்த ஐந்து சக்திகளும் கூட இன்று மாசுகளால் பாதிப்படைந்து கொண்டிருக்கின்றது என்றால் அது மிகையாகாது. ஏனென்றால் இந்நாளில் பெருகி வரும் நோய்களுக்கு காரணமாக இருப்பது மனித மனதின் உணர்வுகளினால் வெளிப்படும் வெறுப்பு, கோபம் என்ற கொடிய நச்சு பாம்பினால் ஏற்பட்ட விஷமாகும்.

பொறாமை மற்றும் பகைமையின் காரணமாக சகோதரன், சகோதரனுக்கிடையே தீராப்பகைமை. இப்படிப்பட்ட நிலையில் சுகமயமான குடும்ப சூழல், சமூக சூழல் என்பது எட்டாக்கனியாகவும், கானல் நீராகத் தான் தோன்றுகிறது.

அமைதியான ஆனந்தம் நிறைந்த சூழ்நிலை என்பது கற்பனைக்குரியவையாக ஆகிவிடுமா? அல்லது மீண்டும் இழந்தவற்றை இந்த மானுட உலகம் திரும்ப பெற்று விடுமா? என்ற கேள்விக்கெல்லாம் விடை ஒன்றே ஒன்று தான்.

பிரச்சினைகளுக்கெல்லாம் தீர்வு காண நாம் மீண்டும் காலச்சக்கரத்தின் ஆரம்பித்திற்கு செல்ல வேண்டும் என்பதேயாகும். ஏனென்றால் யமுனை நதிக்கரையில், தூய்மையான சூழலில் சீத்தளமான, நறுமணம் உடைய தண்ணீர், அங்கு அமர்ந்து ஸ்ரீ கிருஷ்ணன் தனது தோழர்களுடன் இனிய புல்லாங்குழல் இசைத்துக் கொண்டும் மற்ற தோழிகளுடன் நடனமாடி மகிழ்ச்சியினால் நிறைந்த தெய்வீக சக்திகள் நிரம்பிய தேவி-தேவதா வாழ்க்கை வாழ்ந்தனர்.

மாசுபடியாத பூமி, ஆழமான பூந்தோட்டங் கள், மலர்களும் கனிகளும் நிரம்பிய மரங்களும், நாலாபுறமும் தூய்மையே தூய்மை என்றும், நெருப்பும் சூறாவளி காற்றும் இல்லாத வசந்த காலப் பொழுதாக இருந்தது ஆரம்பகால பாரத பூமி.

ஆனால் சிறிது சிறிதாக தெய்வீக உலகத்தின் வளமும், செழிப்பும் மாசு படிய துவங்கி விட்டது. இராஜ ராஜ்யத்தின் மீது இராவண இராஜ்யத்தின் படையெடுப்பு ஆரம்பமானது. அதன பின்னால் ஒன்று பட்டிருந்த மனிதனிடம் நான், எனது என்ற சுயநலமும் அந்த அளவு அதிகமாகி விட்டது. காமம், கோபம், பேராசை, பற்றுதல், அகங்காரம், வெறுப்பு, பொறாமை, பயம் இவை அனைத்து துர்குணங்களும் மனிதனின் தலை மீது ஏறி அமர்ந்து விட்டது. காம விகாரத்தின் காரணமாக ஜனத்தொகை அதிகரித்து விட, முழு உலகமும் இருப்பதற்கே இடம் இல்லாத வாறு சிறியதாகி விட்டது. இதில் மனிதன் ஊர்ந்து செல்ல வேண்டிய நிலை உருவாகி யுள்ளது. தீய குணங்கள் என்ற ராட்சசனின் பிடியில் முழு உலகமும் கைப்பொம்மையாகி விட்டது. ஆனால் இத்தனையும் பார்த்துக் கொண்டிருப்பினும் அறிந்திருந்த போதிலும் மனிதன் கும்ப கர்ணனின் தூக்கத்தில் தூங்கிக் கொண்டு தான் இருக்கின்றான். பரமாத்மாவின் வருகையைப் பற்றியோ அல்லது அவர் மனித குலம் செழிக்க ஆற்றி வரும் மறைமுகமான காரியங்களை பற்றியோ சற்றும் அறியாமல் இருக்கிறார்கள். சிறிதளவேனும் கேட்கும் வாய்ப்பு ஏற்பட்டால் நினைத்து கொள்கிறார்கள் அவர்களுக்கு அவர்களே இதற்கெல்லாம் நமக்கு ஏது நேரம்? அப்படி என்ன எனக்கு வயதாகி விட்டது? சிறிது காலம் போகட்டுமே.... முயற்சிக்கலாம் பின்பு.... என யோசித்து மீண்டும் தூங்க ஆரம்பித்து விடுகிறார்கள். ஆனால் இப்பொழுது நேரத்தின் அறை கூவல் இது தான் - மனிதா விழித்தெழுவாயாக! உயர்வான இறை ஞானத்தை அலட்சியம் செய்ய வேண்டாம்! உலக அழிவு என்ற மாற்றத்தின் புலி நிச்சயம் உண்மையாகவே வரக்கூடும். அந்த வேளையில் ஐயோ, ஐயோ என்று புலம்பினாலும் ஒன்றும் பலன் ஏற்படாது. பரம தந்தை, பரம ஆசிரியர், பரம சத்குரு பரமாத்மா நம்மை விழித்தெழச் செய்துக் கொண்டிருக்கின்றார்.

உலக வாழ்க்கை என்ற பரமபத விளையாட்டில் இது வரை தீய குணங்கள், எனும் பாம்பினால் தீண்டப்பட்டு கீழே விழுந்து கொண்டே இருந்தோம், இதுவே சரியான தருணம் விழுத்தெழுவோமேயானால், நிச்சயம் வைகுண்ட பதவி உண்டு என்பது உறுதியே.

சுற்று சூழல் மாசுக்கு காரணமான மனமாசை அகற்ற முயற்சிப்போம். தமக்குள் உள்ள அசுத்தமான, நன்மையற்ற எண்ணங்களை அகற்றி சாத்வீகமான எண்ணங்களை சிந்தித்து அதனையே சுற்றுச் சூழ்நிலையில் பரப்பினால் மாசற்ற உலகம் விரைவில் உருவாகும். இதற்காக தினசரி ஒருமுகப்பாட்டுடன் பரமாத்மாவை நினைவு செய்ய வேண்டியது அவசியமாகிறது.

எவ்வாறு வாகனங்கள் மற்றும் ஆலை களின் மாசுகளை கட்டுப்படுத்த மாசு கட்டுப் பாட்டு வாரியம் (Pollution control Board) (Pollution control Certificate) பரிசோதித்து மாசு கட்டுப்பாடு சான்று தரப்படுகிறது. அது போலவே மனமாசுகளை கட்டுப்படுத்தி இறைவனிடமும் (No Mind Pollution Certificate) பெற அருகில் உள்ள பிரம்மா குமாரிகள் தியான நிலையத்தை விரைவில் அணுகுங்கள். இராஜயோக தியானத்தைப் பயிலுங்கள். மனமாசுகளை கட்டுப்படுத்துவோம்! இயற்கை தாயை பேணி காக்க ஒத்துழைப்போம்!

**உலகம் செழிப்படைய இயற்கையின் மாசுகளை நீக்க வேண்டும்**

**உள்ளம் செழிப்படைய மனதின் மாசுகளை நீக்க வேண்டும்**

## 12 ஜோதிர் லிங்க தரிசன சேவை விவரங்கள்
## (மதுரை துணை மண்டலம்)

| Sl.No. | Name of The Centre | From | To | Benefit Souls |
|---|---|---|---|---|
| 1 | Aruppukottai | 04.04.2008 | 09.09.2008 | 32790 |
| 2 | Kovilpatti | 25.04.2008 | 29.04.2008 | 33670 |
| 3 | Sivakasi | 03.05.2008 | 07.05.2008 | 34480 |
| 4 | Pudukootai | 28.05.2008 | 02.06.2008 | 30360 |
| 5 | Kodaikannal | 11.07.2008 | 15.07.2008 | 21630 |
| 6 | Rajapalayam | 23.07.2008 | 27.07.2008 | 33770 |
| 7 | Dindigul | 01.08.2008 | 05.08.2008 | 34180 |
| 8 | Sivagangai | 13.09.2008 | 17.09.2008 | 30260 |
| 9 | Nagapattinam | 19.09.2008 | 23.09.2008 | 31740 |
| 10 | Karaikal | 26.09.2008 | 30.09.2008 | 31870 |
| 11 | Kumbakonam | 09.10.2008 | 13.10.2008 | 32610 |
| 12 | Paramakudi | 20.12.2008 | 24.12.2008 | 30790 |
| 13 | Thirupparankundram | 29.12.2008 | 13.01.2009 | 44540 |
| 14 | Tuticorin | 23.01.2009 | 29.01.2009 | 51430 |
| 15 | Trichendhur | 07.02.2009 | 11.02.2009 | 29620 |
| 16 | Madurai | 13.03.2009 | 20.03.2009 | 76340 |
| 17 | Karaikudi | 18.06.2009 | 22.06.2009 | 25940 |
| 18 | Aruppukottai | 03.07.2009 | 06.07.2009 | 19250 |
| 19 | Madurai Nagamalai, Pudukootai | 25.07.2009 | 28.07.2009 | 18750 |
| 20 | Cumbum | 08.08.2009 | 11.08.2009 | 23860 |
| 21 | Madurai | 29.10.2009 | 02.10.2009 | 72450 |
| 22 | Nilakottai | 02.01.2010 | 04.01.2010 | 14860 |
| 23 | Theni | 19.02.2010 | 24.02.2010 | 23490 |
| 24 | Tuticorin | 24.06.2010 | 28.06.2010 | 19540 |
| 25 | T.Kallupatti | 02.07..2010 | 05.07.2010 | 12165 |
| 26 | Sholanvandan | 12.10.2010 | 15.10.2010 | 16150 |

| | | | | |
|---|---|---|---|---|
| 27 | Pattukottai | 24.12.2010 | 28.12.2010 | 22101 |
| 28 | Kovilpatti | 25.02.2011 | 01.03.2011 | 18200 |
| 29 | Madurai Meenakshinagar | 06.03.2011 | 13.03.2011 | 42260 |
| 30 | Tiruppuvanam | 25.03.2011 | 29.03.2011 | 14630 |
| 31 | Virudhunagar | 01.04.2011 | 05.04.2011 | 36245 |
| 32 | Aruppukottai | 20.04.2011 | 02.05.2011 | 68563 |
| 33 | Puliampatti, Arupppukottai | 26.04.2011 | 28.04.2011 | 22548 |
| 34 | Kodaikanal | 24.06.2011 | 29.06.2011 | 29875 |

## 12 ஜோதிர் லிங்க தரிசன சேவை விவரங்கள் (திருவண்ணாமலை பகுதி)

| Sl.No. | Name of The Centre | From | To | Benefit Souls |
|---|---|---|---|---|
| 1 | Vandavasi | 17.12.2008 | 21.12.2008 | 24340 |
| 2 | Cheyyar | 21.02.2009 | 25.02.2009 | 28950 |
| 3 | Arani | 16.12.2009 | 20.12.2009 | 34230 |
| 4 | Polur | 10.02.2010 | 14.02.2010 | 24320 |
| 5 | Chengam | 15.12.2010 | 19.12.2010 | 13230 |
| 6 | Kannamangalam | 22.10.2011 | 27.10.2011 | 11210 |

**DOORDARSHAN MALAYALAM CHANNEL**

Awakening with Brahma Kumaris is being telecasted on every Sunday Morning 6.30 a.m. to 7.00 a.m.

B.K. Meena, Palakkad, Kerala

Further Details: phone: 491-2567060 Mobile: 09946820448
Email: shivajyothimedia@gmail.com

ஆசிரியரும் பிரசுரிப்பவரும் பி.கு. அண்ணபூர்ணா, பிரஜாபிதா பிரம்மாகுமாரிகள் ஈஸ்வரிய விஷ்வ வித்யாலயம், சாந்திதாமம், பிளாட் எண்: 3702, Q-96, 3வது அவின்யு, அண்ணாநகர்,